# தமிழ்நாடும் சினிமாகலையும்

131



6 அணா

NW. 211
N47
68300

...தபதிப்பகம்.

# 'தமிழ் நாடும் சினிமா கலையும்'

ஆக்கியோன்

"செங்கு"

செங்கு பதிப்பகம்

எழுகிணறு :: சென்னை.

விலை: 6 அணா.

Godland & Co., Q.H. No. M.S. 254
55, Muthumari Chetty Street,
G.T., MADRAS.

# முகவுரை

---

சகல கலைகளிலும் முன்னணியில் நிற்கும் நம் தமிழ்த் திருநாடு சினிமா கலையில் மட்டும் வெகு தூரம் பின் வாங்கி நிற்கிறதே, என்று நினைக்கும்போது வருந்தாம லிருக்க முடியவில்லை.

"தமிழர் எக்கலையில் சிறந்து விளங்கவில்லை? சங் கீதத்தில் சம்பன்னராக விளங்கவில்லையா? நாட்டியத்தில் நற்கியாதி யடையவில்லையா? நாடகத்தில் தான் நிபுண ராய்த் திகழவில்லையா? சிற்பத்தில் தான் சீற்பெற்று விளங்கவில்லையா? மற்றெந்த கலையில் தான் தேர்ச்சிப் பெறவில்லை நம் தமிழர்? இத்தகைய கலைஞர்களாகிய நம் தமிழர்களா இன்று சினிமா கலை சீரழிந்துக்கிடைப்பதைக் கண்டு சகித்திருப்பது?" என்றவாறு, நெடுநாளாக என் உள்ளத்திலடைப் பட்டுக்கிடந்த பல அபிப்பிராயங்களை புத்தக வாயிலாக பலருக்கும் அறிவிக்கவேண்டியே இச் சிறிய புத்தகத்தை எழுதத் தொடங்கினேன். இது படித் தவர் முதல் பாமரர்வரை, பொதுவாக சினிமாப் பிரியர் களனைவருக்குமே பெரிதும் பயன் படுமென்று நம்பு கிறேன்.

நான் முதற் முதலில் எழுதப்புகுந்த புத்தகம் இதுவே. யாதலால் இதில் காணப்படும் குற்றங் குறைகளை மன் னித்து என்னை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆக்கியோன்.

*Sole Distributor:*

**Exclusive of Madras City**

R. GURUMURTHY

15, WESTCOTT ROAD

MADRAS 14

# தமிழ் நாடும் சினிமா கலையும்

## சினிமா ஒரு கலையா?

இன்றைய சினிமா கலை நம் தமிழ் நாட்டில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறதென்று ஆராயப் புகுவோமேயாகில் 'வர வர மாமியார் கழுதைப்போலானாள்' என்ற முதுமொழியின்படிதான் இருக்கிறது. ஒரு சிலர், 'சினிமா ஒரு கலையா? ஆய கலைகளுள் சினிமாவும் ஒரு கலைதானா?' என ஐயுறுகின்றனர். அறுபத்திநான்கு கலைகளுள் சிறந்ததாகக் கருதப்படுவது நாடகக் கலைதான். நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு நிழல் ரூபமாகக் காக்ஷியளிப்பதே இன்றைய சினிமாவும். அப்போது சினிமாவையும் ஒரு கலையாக ஏன் கொள்ளக்கூடாது? இந்த சினிமா கலையை மேன்மேலும் வளர்ப்பதற்கென மேல் நாட்டில் ஏன், நம் வடநாட்டிலும்கூட பல கழகங்களும், விடுதிகளும் ஏற்படுத்தியிருப்பதிலிருந்தே சினிமா எத்தகைய சிறந்த கலையாகக் கொள்ளப்படுகிறதென்பது விளங்கவில்லையா? தேவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தேவலோகம் என்று சொல்வதுபோல, இன்று அமெரிக்காவிலும் சினிமா கலைஞர்களுக்கென ஒரு சினிமா உலகை சிருஷ்டித்திருக்கிறார்கள். ஆம் அது தேவலோகமென்று சொல்லிக்கொள்ளும் சொர்க்க லோகத்தைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்ததாகவே கருதப்படுகிறது. அதுதான் ஹாலிவுட் (Hollywood) என்ற சினிமாலோகம். அவ்வுலகில் சினிமா கலையை ஒரு அழகான மாளிகையாகவும், பட முதலாளிகள் அம்மாளிகையின் காப்பாளர்களாகவும், டைரக்டர்கள், ஒளி, ஒலிப்பதிவாளர்கள் முதலியோர் அம்மாளிகையை அழகுப்படுத்தும் நந்தவனமாகவும் அவ்வுலகின் வானத்தை சிறப்பிக்க நடிக நடிகைகள் நக்ஷத்திரங்களாகவும் திகழ்ந்து வருகிறார்கள்.

இங்ஙனம் சினிமாகலை மேல் நாட்டில் எவ்வளவு உச்ச நிலையையடைந்திருக்கிறது என்பது விளங்குகிறதல்லவா?

இதனால் அந்நாட்டின் சினிமாகலைஞர்களின் உழைப்பும் எத்தகையதென்பது தெரிகிறதல்லவா ?

இத்தகைய சினிமாகலை நம் நாட்டில் எந்நிலையிலிருக்கிறது என்று சற்று ஆராய்வோம்.

## நம் நாட்டு சினிமா கலை :—

*நாடகக்கலை :*—சினிமா தோன்றுதொட்டு நம் நாட்டில் வழங்கப்படவில்லையென்றாலும் அது நம் நாட்டுக்கலையல்ல என்று சொல்ல இடமில்லை. ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் நாடகக்கலையும் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே. ஒரு காவியத்தையோ, புராணத்தையோ, அல்லது பண்டய சரித்திரங்களையோ சித்தரித்துக் காட்டுவதில் நம் நாடு மிகச்சிறப்புப் பெற்றிருந்தது. அப்படி சித்தரித்துக் காட்டுவதுதான் நாடகமென வழங்கப்பட்டது. கற்றறிந்தவனுக்கும் கல்லாதவனுக்கும் மிகப்பேருதவியாகயிருந்தது இந்நாடகம். கண்ணகி இப்படிதான் இருந்திருக்கவேண்டுமென்று படித்தவன் உணர்கிறான் காவியத்தின் வாயிலாக—ஆனால் பாமரனோ? அதையறிந்துக் கொள்ளும் வாய்ப்பு அவனுக்கேது? ஆனால் கண்ணகியைப் பற்றியறிந்துக்கொள்ள என்னமோ அவன் மனம் விழையும். அத்தகையவர்கள் நாடகத்தின் வாயிலாக கண்ணகியின் நற்குண நற்செய்கையையும், கற்பின் மாண்பையும் அறிய ஏதுவாகிறது. இதனால் நாடகம் எத்தகைய பயன்தரக்கூடிய சாதனமாகவும் பெருங்கலையாகவும் இருக்கிறது என நோக்குங்கால் நாடகக் கலைக்கு நம் மனமார்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**இன்றைய நாடகக்கலை :**- பண்டய நாடகங்களையும் இன்றைய நாடகங்களையும் எடுத்து சீர்தூக்கி நோக்கும்போது இன்றைய நாடகக் கலையின் முன்னேற்றம் வெள்ளிடைமலையென விளங்குகிறது. நாகரீக உலகில் நவீன சாதனங்களுடன் நடித்துக்காட்டும் நாடகங்களைப் பார்க்கிறோம். இன்றைய நாடகங்களில் ஒவ்வொரு சம்பவமும் நம் கண்முன்னே தத்ரூபமாகக் காக்ஷியளிக்கும்போது நாம் நம்மையே மறந்து அவையாவும் உண்மையாகவே நிகழ்கிறதோ என்றுகூட சில சமயங்களில் சந்தேகம் தோன்றி

விடுகிறது. இத்தகைய நாடகக்கலை சில நாட்களுக்கு முன்னே சற்று சீரழிந்திருந்தது. அங்கிலையில் நாடகக் கலையே மாய்ந்து விடுமோ, என்றும் எண்ணினோம். அப்போதுதான் சினிமாவும் மெதுவாக தலைக்காட்ட ஆரம்பித்தது.

**சினிமா மேல் நாட்டுக்கலையா?**:—சினிமா மேல்நாட்டுக் கலை, இதனால் நம் சீர்திருத்தமே சீரழிந்து விடுகிறது, என்றெல்லாம் சிலர் மனம் போனவாறு பேசிக்கொள்ளுவதைக் கேட்கும்போது அவர்களின் அறியாமைக்காக நாம் மனம் வருந்த நேரிடுகிறது. முதலில் சினிமா மேல்நாட்டுக்கலையா? என்று பாருங்கள். நாடகம் நம் நாட்டுக்கலை யென்பதை யாரும் மறக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. அத்தகைய நாடகத்தை அடிப்படையாகக் கொண்டதே இன்றைய சினிமாவும் என்பது தெளிவு. நாடகத்தில் ஒரு சம்பவத்தை நேருக்கு நேராக நடித்து காட்டுகிறார்கள். சினிமாவிலோ, நடிக நடிகைகளை நடிக்கச்செய்து அதை அப்படியே புகைப்படமாகப் பிடித்து, வேண்டும்போது அதை புரொஜக்டரில் போட்டுக் காட்டுகிறார்கள் திரையில். இதைத்தான் சினிமா என்கிறோம். நம் நாட்டுக் கலையான நாடகத்தின் நிழல்ரூபமான சினிமாவை மேல்நாட்டுக் கலையென சொல்வது எங்ஙனம் பொருந்தும்?

ஆனால் சினிமா உற்பத்தி ஸ்தலத்தை கவனிக்கும் போது மேல் நாட்டைத்தான் நினைவிற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. சந்தேக மன்னியில் சினிமா மேல் நாட்டாரின் ஓர் அற்புத சிருஷ்டிதான்; அதனால் சினிமாவே மேல்நாட்டுக் கலைதான் என்று சொல்லிவிட முடியுமா?

கலை எல்லோருக்கும் பொது தானே? அது மேல் நாட்டினதாயினும் சரி, கீழ் நாட்டினதாயினும் சரி, அக் கலையை அனுபவிக்கவேண்டியது நம்போன்ற ரசிகர்களின் கடமையல்லவா? ஒரு வேளை "சினிமாவை நாங்கள்தான் கண்டுபிடித்தோம் நீங்களல்ல" என்று மேல் நாட்டார் மார்தட்டிக் கொண்டுவந்தால் அப்போது வேண்டுமானால் நம் நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துவிட்டால் போகிறது, ஆனால் அப்படி பட்டவர்களல்ல மேல் நாட்டினர். நிற்க சினிமா உற்பத்தியை கவனிப்போம்.

**சினிமா உதயம்:**—சினிமா முதன் முதலில் மேல் நாட்டில் தான் உதயமாயிற்று என்பதில் சந்தேகமே யில்லை. சினிமா உற்பத்தியான அந்நாளில் முதல் முதலாக சலனப் படங்கள் தான் (Silent Picture) கண்டுபிடிக்கப்பட்டது. கால வெள்ளத்தில், விஞ்ஞான வளர்ச்சியால் ஒலியை (Sound) ஒளியாக்கி (Light) அவ்வொளியை படங்களின் (Film) வலதுபுற ஓரத்தில் பதிவுசெய்து, அப்படம் ப்ரொஜெக்டரின் மூலம் ஓட்டும்போது ஆர்க் (Arc) என்ற பிரகாசம்பொருந்திய விளக்கின் வாயிலாக பதிவுசெய்யப்பட்ட ஒளியினின்று ஒலியை தொனிக்கச்செய்து பேசும் படங்களாக தயாரித்தனர். இதுதான் இன்றைய பேசும்படம். சினிமா தோன்றாத அக்காலத்தில் நம் நாட்டில் சினிமாவை பூலோகத்தின் எட்டாவது அதிசயமாகக்கருதியிருந்தாகள். வெகுநாளைக்குப் பிறகு மெதுவாக இந்தியாவில் (முதன் முதல் வட இந்தியாவில்) சினிமா படங்களைத் தயாரிக்கலானார்கள், அவைகளும் சலனப்படங்களே. நாளடைவில் சலனப்படம்போய் பேசும்படமாகவும் தயாரித்தனர். அதுவும் நம் தமிழ்நாட்டிலல்ல என்பதை நினைவுறுத்துகிறேன். நம் இந்தியாவில் முதன் முதல் சினிமாவை தயாரித்தவர் நாசிக் ஜில்லாவைச்சேர்ந்த ஸ்ரீ தந்திராஜ கோவிந்தபால்கே என்பவர்தான். அவர் பல நாட்களாக செய்த அநுபவ ஆராய்ச்சியின் பயனாக 1912-ம் வருஷம் ஹரிச்சந்திரா என்னும் பேசாப்படத்தைத் தயாரித்தார்; பிறகு தொடர்ந்தாற்போல் பல சலனப்படங்களைத் தயாரிக்கலானார். இதைக்கண்டு ஆங்கிலேயர்களே மகிழ்ந்தனர். அவரை இந்திய சினிமா கலையின் பிதா எனக்கொள்ளலாம். வருடங்கள் பல ஓடி மறைந்தன. 1927-ம் வருஷத்தில் பேசும்படம் கண்டுபிடிக்கப்பட்டது; அதன் பிறகு மூன்று வருஷங்கள் கழித்துதான் அதாவது 1930-ம் வருஷத்தில் நம வட இந்தியாவிலும் பேசும்படம் தயாரிக்கப் பெற்றன.

முதன் முதல் இந்தியாவிலேயே பேசும்படம் தயாரித்தவர் கான்பகதூர் ஆர்தேஸ்-இராணி என்னும் வடநாட்டார்தான். அதுவரை பம்பாயிலே சலனப்படங்களைத் தயாரித்துப் பெரும்புகழடைந்திருந்த அவர் திடீரென்று ஒரு பேசும்படத்தைத் தயாரிக்கவேண்டுமென்று எண்ணி

ஞர். அதற்கேற்ற சாதனங்களும் அவருக்கு கிடைத்திருந்ததால் 1930-ம் வருஷம் 'ஆலமரா' என்ற பெயருடன் ஒரு பேசும்படத்தைத் துணிகரமாக தயாரித்தார் ஹிந்தியில்.

அதைக்கண்ட கல்கத்தா வாசியான மதன் கம்பெனியார், அக்காலத்தில் பார்ஸி நாடகக் கம்பெனியின் சிறந்த நடிகர்களாக இருந்த நிஸ்ஸார், கஜ்ஜான் என்ற நடிகர்களைக்கொண்டு "ஷிரின்பராத்" என்னும் உருதுப்படத்தைத் தயாரித்து நல்ல வெற்றியுமடைந்தார். அதன்பிறகு கேட்கவா வேண்டும்! ஏனையோர்களும் மடமடவென்று பேசும் படங்களாக எடுத்துத் தள்ளினுர்கள். இதெல்லாம் நம் தமிழ் நாட்டிலல்ல. பம்பாய், கல்கத்தா நகரில் நிகழ்ந்தவை என்பது ஞாபகமிருக்கட்டும். இப்போது நம் நாட்டிற்கு வருவோம். வடநாட்டில் பேசும் படங்கள் உதயமான போதெல்லாம் நம் நாட்டில் வெறும் சலனப் படங்களைத்தான் நம்மவர்கள் கண்டு ஆநந்தம் கொண்டிருந்தனர். கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்பவர்கள் தானே நம்மவர்கள். கிடைத்தவரையில் திருப்தியடைந்தனர்போலும். இருந்தாலும், நம்நாட்டிலும் பேசும் படத்தைத் தயாரித்தால் நல்ல லாபமடையலாம் என்ற எண்ணம் முதலில் நம் தமிழர்களின் மனதில் உதிக்காவிட்டாலும் வடநாட்டாரின் மனதிலாவது உதித்ததே அதுவும் நல்லதுதான். அதுவரை நம் தென்னிந்தியாவுக்கு வந்து கொண்டிருந்த ஓரிரண்டு ஹிந்துஸ்தானி படங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்ததைக்கண்ட பம்பாய் ஆசாமியான டாக்டர் பட்டேல் என்பவரின் மனதில் திடீரென்று ஓர் எண்ணம் உதயமாயின. "பிறபாஷையான ஹிந்துஸ்தானி படங்களுக்கே இத்தனை வரவேற்பு இருக்கும்போது அவர்களின் தாய் பாஷையான தமிழிலேயே பேசும்படங்களைத் தயாரித்தால் எவ்வளவு வரவேற்பு இருக்கும். நமக்கும் எவ்வளவு லாபத்தையளிக்கும்?" என்றெல்லாம் எண்ணி தமிழ் படமொன்றைத் தயாரிக்க ஏற்பாடு செய்யலானுர். பேசும்படம் தயாரிக்கவேண்டுமானுல் அதில் நடிக்கும் நடிக நடிகைகள் கொஞ்சம் சங்கீதமும், நடிக்கும் திறமையும் பெற்றிருந்தால்தான் பேசும் படத்தில் நடிக்க சாதகமாக இருக்கும். அக்காலத்தில் நாடக மேடையில் பிரபல

மடைந்திருந்த டி. பி. ராஜலக்ஷிமியின்மீது டாக்டர் பட்டேலின் திருஷ்டி விழவே உடனே அந்த அம்மையாரை ஒப்பந்தம் செய்துக்கொண்டு 'காளிதாஸ்' என்ற படத்தை தமிழும், தெலுங்கும் கலந்த பாஷையில் தயாரித்தார். அதன் மூலம் நல்ல வெற்றியும் லாபமும் அடைந்தார் டாக்டர் பட்டேல். பேசும்படம் தயாரிப்பதின் மூலம் கிடைக்கும் பெரும் ஆதாயத்தைக்கண்ட மற்றவர்களும் (பணத்தை வைத்துக்கொண்டு எதில் செலவழித்து லாபம் பெறலாம் என்று இரவும் பகலும் சிந்தனைச்செய்பவர்கள்) பொருமை யடைந்தவர்களாய் தாங்களும் பேசும்படத்தைத் தயாரிக்க முன்வந்தார்கள். அவர்களுக்கு உள்ளூர என்னமோ பயந்தான், "எங்கே போட்ட பணம் போய் விடப்போகிறதோ" என்றுகூட அடித்துக்கொள்ளும் அவர்கள் இருதயம்; எப்படியோ ஒருவிதமாக சில கதையை பேசும்படமாக திரையில் கொண்டு வந்துவிட்டார்கள். ஆனால் அப்போது படம் பிடிக்கப்படவேண்டுமானால் இக்காலத்தைப்போல் சிரமம் கொள்ளவேண்டியதில்லை. காமிராமுன் நடிக நடிகைகளை நிற்கவைத்து நாடகத்தில் நடிப்பதுபோல் நடிக்கச்செய்து அப்படியே படம் பிடித்து விடுவார்கள். இப்படி படம் பிடிப்பதினால் 15 நாள் அல்லது 1 மாதத்திற்குள் ஒரு படத்தைத்தயாரித்து வெளியிட்டுவிடுவார்கள். இம்மாதிரி 15, 20 நாட்களுக்குள் படமெடுத்து திக் விஜயத்திற்கு அனுப்பிவந்தவர்களுள் மிகத் திறமை வாய்ந்திருந்தார் நம்மவரில் ஒருவர். அவர் தான் சௌண்ட்சிடி (Sound City) நாராயணன். பாவம் அவரும் மறைந்தார். ஆனால் சினிமா கலைமட்டும் மறையவில்லை. நாளுக்கு நாளாக இல்லாவிட்டாலும் வருஷத்திற்கு வருஷமாவது சிறிதளவு முன்னேறி வருவதுபற்றி கொஞ்சமாவது சந்தோஷிக்க வேண்டியதுதான்.

நம்மவர்கள் ஒன்றைக் காப்பியடிக்கும் தொழிலில் தலைசிறந்துவிளங்குகிறார்கள் என்றாலும், அதை சரிவர 100க்கு 100ஆக காப்பியடிக்கிறார்களா என்றால் அதுதான் கிடையாது 'செய்வன திருந்தச்செய்' என்பதைப்போல், மேல் நாட்டினரைப்பார்த்து படம் எடுக்க முன்வந்தவர்கள் ஏன் அவர்களைப்போல் கலையை வளர்க்க முயற்சிசெய்வதில்லை என்றுதான் விளங்கவில்லை. மேல் நாட்டினர் சினிமாவின்

வாயிலாக பணத்தைத்தான் சம்பாதிக்கிருர்கள் என்று எண்ணவேண்டாம். அவர்கள் கலைக்காகவும் பாடு படுகிருர்கள் என்று தெளிவாக தெறிகிறது அவர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களை நோக்கும்போது.

***சினிமாவின் கர்த்தாக்கள் :***—ஒரு படம் உருவாக்கப் பட்டு வெளிவர வேண்டுமானல் அதற்கு படமுதலாளி, நிர்வாகஸ்தர்கள், டைரக்டர், கதாசிரியர், பாட்டு எழுது பவர், நடிகர்கள், நடிகைகள், ஒலிப்பதிவாளர், ஒளிப்பதி வாளர், மேக்கப் நிபுணர், ஓவிய நிபுணர், விநியோகஸ்தர் கள் முதலிய சிப்பந்திகள் தான் காரணகர்த்தர்கள் என்று சொன்னல் மிகையாகாது. ஒரு படம் ஆவதும், அழிவதும் இவர்கள் கையில் தான் இருக்கிறது என்று சொல்ல வேண்டும் பார்க்கப்போனல் படம் எடுப்பது ஒரு மகத் தான பொருப்பை ஏற்றுக்கொள்வது போல்தான். அத் தகைய மாபெரும் பொருப்பையேற்கும் இவர்கள் அப்பொருப்பை சரியான வழியில் நிர்வாகிக்கிருர்களா? என்ருல் அதுதான் கிடையாது. பெயருக்கு மாத்திரம பொருப்பையேற்றுக்கொண்டு, காரில் செல்வதும் வருவது மாக இருந்துவிட்டாலே படம் முற்றுப்பெற்று வெற்றி யுடன் வெளிவந்து விடுமென்று நினைப்பவர்கள் நம நாட் டில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பதுபேர் என்று தைரிய மாக தலைநிமிர்ந்துக் கூறலாம். இம்மாதிரியான படா டோப காரர்களல்ல மேல்நாட்டினர். ஒரு சிறிய பொருப் பையேற்கும் அதிகாரிகூட கருமமே கண்ணுக தன் வேலை யை நடத்த, இரவும் பகலுமாக உழைத்து அச்சிறிய பொருப்பையே மலையளவாகக் கருதி அவ்வேலையைப் பூர்த்திசெய்ய முயலுவார்கள். தாம் வகிக்கும் பொருப்பை தங்கள் சொந்த காரியமாகவே எண்ணுவர். ஆனல் நம் தமிழ் நாட்டினரோ தாம் வகிக்கும் பொருப்பு, தாம் பெறும் ஊதியத்திற்காகத்தான் என்றெண்ணி, "பாப்பாத் தியம்மாள் மாடுவந்தால் பார்த்துக்கொள்" என்று சொல் வதுபோல்தான் தம வேலையை செய்துவருகிருர்கள். மேல் நாட்டினர் உழைப்பது கலைக்கு; நம்மவர் உழைப்பது பணத் திற்கு; இது கலையாகுமா? இதன் பெயரும் கலையா? அந்தோ சகல கலைகளிலும் முன்னணியில் நிற்கும் நம் தமிழ் நாடு ஏன் சினிமா கலையில்மட்டும் பின்வாங்கி நிற்

கிறது என்றுதான் விளங்கவில்லை. நாம் தமிழனாகப்பிறந்து பெருமையுடன் தலைநிமிர்ந்து நடக்கும் இத்தருணத்தில், சினிமா கலையை நினைக்கும்போது தாங்கொண்ணு வருத்தம் ஏற்படுகிறது. இதுவும் நம் தமிழ்நாடு செய்த தீவினைப் பயனு?

நிற்க, படப்பொருப்பாளிகள் ஒவ்வொருவரின் வேலையை சிறிது கவனிப்போம். படம எடுக்கவேண்டும் என்ற எண்ணம் உதயமாவதே ஒரு முதலாளி மனதில்தான், ஆதலால் முதலாளியையே முதல் ஆளாக எடுத்துக்கொள்ளலாம். ஆம் சந்தேகமின்றி அவரே தான் முதல் ஸ்தானத்தில் நிறகிருர்.

படமுதலாளி:—படமுதலாளி என்று வந்துவிட்டால் பார்வைக்கு பருத்த சரீரமும், கடூரப் பார்வையும், அதிகார தோரணையும், ஸ்ரீலோலராகவும் இருந்துவிட்டால்மட்டும் போதாது என்பதை நம் படமுதலாளிகள் மறந்தே விடுகிருர்கள். படமுதலாளி ஒரு படத்தைத் தயாரிக்கவேண்டும் என்ற எண்ணம் தன் மனதில் உதித்ததும், அப்படத்திற்கான பூர்வாங்க வேலைகளைக் கவனிக்க சில நிர்வாகஸ்தர்களையமர்த்தி அவர்களுடன் கலந்தோலோசனைசெய்து பிறகு ஒரு முடிவுக்கு வருவார்கள், பிறகு ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் திறமைக்குத் தக்கவாறு ஒவ்வொரு பதவியளிக்கப்படும். குறிப்பிட்ட படம் முடியும்வரையில் இந்த நிர்வாகிகளுடனிருந்து ஒத்துழைத்து அப்படத்தை வெளியிடும் வரையில் உறக்கமே கொள்ளமாட்டார் படமுதலாளி; இது மேல்நாட்டில். நம் நாட்டிலோ ஒரு முதலாளி குறிப்பிட்ட படத்தை தானே தேர்ந்தெடுத்துவிடுவார். (மேல் நாட்டு முதலாளிகளைப்போல் இவருக்கு ஆலோசகர்களே தேவையில்லை, இவர் தான் பிருகஸ்பதியாயிற்றே) படம் எடுக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் உதித்ததுமே, உடனே கதையின் பெயரும் அவர் மனதில் உதயமாகிவிடும். ஒரு வள்ளியோ, ஒரு நந்தனுரோ அல்லது ஒரு சுபத்திரையோ அவர் மனக்கண் முன்னே தோன்றும். உடனே ஆரம்பித்துவிடுவார் நடிக நடிகைகளின் பேட்டியை. முதலில் நடிகர்கள் மீதுகூட அவருக்குக் கவனம் செல்லாது. நடிகைகளின் மீதுதான் அவர் மனம்

நாடும். காதா நாயகியைத் தேர்ந்தெடுப்பதுதான் நம் நாட்டில் வெகு சுலபமாயிற்றே. ஒரு புதிய முகத்தைக் கண்டு பிடிக்கவேண்டும் என்றால்தானே கஷ்டம்? இருக்கவே இருக்கிறார்கள் பேர்போன சில அம்மணிகள் அவர்களுக்கு அழகில்லையா? அங்க அமைப்பில் குறைவா? நட்க்ஷத்திரம் என்ற பெயரைத்தான் வாங்கவில்லையா? கணக்கற்ற படங்களில் தான் நடிக்கவில்லையா? ஆபாசங்களை ஏற்று ஆபாசமாய் நடிக்கத்தான் திறமையில்லையா? அந்த அம்மையார் நடித்தாலே முதலாளியின் பணப் பெட்டி நிறைந்து வழிந்துவிடும் என்றால், பின் அந்த நடிகையை ஒப்பந்தம் செய்துக்கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? முதலாளிக்கு வேண்டியது பணந்தானே? கலையை பற்றி அவருக்கு என்ன? 'கலை' என்ற ஒரு பதம் அவர் அகராதியிலிருந்தால் தானே!

இன்றைக்குப் பேசும்படம் நம் தமிழ் நாட்டில் தோன்றி ஏறக்குறையப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகிறதென்றே கூறலாம் இதுவரை சுமார் 400 தமிழ் பேசும் படங்களுக்குமேல் வெளிவந்துள்ளன. அவைகளில் முதல்தர வெற்றிகரமான படங்கள் எத்தனையென்று நோக்குங்கால் ஓரிரண்டாவது இருக்குமா என்றுகூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. அப்படி வெற்றிப் பெற்றதாகக் கூறப்படும் ஓரிரண்டு படங்களும் சில அம்சங்களில் தான் வெற்றிப் பெற்றதாயிருக்கும் ஒரு படம் பாட்டில் மட்டும் வெற்றிப் பெற்றிருக்குமேயானால் ஒரு படம் நடிப்பில் மட்டும் புகழடைந்திருக்கும்; அல்லது ஒரு படம் கதையமைப்பினால் சோபையடைந்திருக்குமாகில் ஒரு படம் அடுக்குத் தொடர் வசனம் அமைப்பினால் பலே என்ற பட்டம் பெற்றிருக்கும்.

அதற்குத் தகுந்தாற்போல் நம்மவர்களும் அப்படிதானேயிருக்கிறார்கள். ஒரு படத்தில் கதா பாத்திரத்தைத் தாங்கும் நடிகனோ அல்லது நடிகையோ கொஞ்சம் இனிமையாகப் பாடிவிட்டால் போதும். அந்தப் பாட்டுக்காகவே ஒரே ரசிகர் பத்து தடவைக்கூட அப்படத்தைப் பார்த்து ரசித்து ஆநந்திப்பார். அல்லது அப்படத்தில் நடிக்கும் கதா நாயகி வசீகரத் தோற்றத்துடன் ஜனங்களின் மனதை

கவர்ந்திழுக்கும் முறையில் ஓடி ஆடி நடித்துவிட்டால (நடிப்பு என்று நான் கூற துணியவில்லை அவர்கள்தானே அதை நடிப்பு என்றெண்ணி ஓடுகிருர்கள், ஆடுகிருர்கள்) அந்நடிகையைப் புகழ்ந்து வரைய ஆரம்பித்துவிடுவார்கள் நம் பத்திரிகை நண்பர்கள். அதிலும் சமயோசிதம்போல் கூத்தாடும் சில பத்திரிகைக் காவடிகள்தான் இருக்கிறதே இஷ்டம்போல் வரைந்துத்தள்ள. அதனல் அந்த நண்பர்களுக்கு என்னதான் வந்துவிடுகிறதோ தெரியவில்லை. நாலு விளம்பரங்களைத்தானே எதிர்பார்க்க முடியும்? இந்த விளம்பரத்திற்காகவா கலையை அற்பணிப்பது? அப்படி செய்வது கலையையே கொலைசெய்வது போன்றதல்லவா? இதையெல்லாம் தெறிந்துதானே என்னவோ நம் பட முதலாளிகள் வேறு வழியின்றி பார்த்து பார்த்து சலித்துப்போன பழைய கிழடுதட்டிய முகங்களையே கொண்டுவருகிருர்கள் போலும். தவிர நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுப்பதில் நம்மவர்கள் கையாளும் முறைவேறு, மேல் நாட்டினர் கையாளும் முறைவேறு. நம்மவர்களின் முறைதான் யாவருமறிந்த விஷயமாயிற்றே ஆதலின் மேல் நாட்டினரின் முறையைக் கவனிப்போம். மேல் நாட்டுப் படமுதலாளிகள் நடிகர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு கிளை ஸ்தாபனத்தையே ஏற்படுத்தியிருக்கிருர்கள். அது பல நிர்வாகஸ்தர்களைக் கொண்டதொரு அறிய ஸ்தாபனம். அந்த நிர்வாகஸ்தர்களில் சிலர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அந்நாட்டில் சில நாட்கள் தங்கி இருந்து அந்நாட்டின் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் நடக்கும் நாடகங்களைப் பார்க்கச்சென்று அந்நாடகங்களில் நடிக்கும் தேர்ச்சிப்பெற்ற யுவர்களையும், யுவதிகளையும் குறித்துவைத்துக் கொள்வார்கள். நாடகம் முடிவுற்றதும் அக்கல்லூரியின் தலைமையதிகாரியை அணுகித் தங்களை இன்னரென்று தெரிவித்துக்கொண்டு, தாங்கள் நாடிவந்த காரியத்தையும் தெறிவித்துக் கொள்வார்கள். தங்கள் மனதில்பட்ட யுவர்களையும் யுவதிகளையும் வரவழைக்கச் சொல்லி அவர்களைப் பரீக்ஷை செய்துப்பார்த்து திருப்தியடைந்தபின் தாங்கள் தயாரிக்கப்போகும் படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்துக் கொள்வார்கள். அதுவும் தேர்ந்தெடுக்கப்படும் யுவர்களும் யுவதிகளும் இஷ்டப்பட்டு தலைமையதிகாரியும் பிரியப்பட்டால்தான் ஒப்பந்தஞ்செய்துக் கொள்ளப்படும்.

கலையில் ஆர்வங்கொண்டு சினிமாவானில் நக்ஷத்திர மாக திகழும் காலம் எப்போது வருமோ என்று கார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு படத்தைத் தயாரிப்பவர்களே நேரில்வந்து கூப்பிட்டால் அந்த அறிய சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடுவார்களா?

இப்படி தேர்ந்தெடுக்கப்படும் யுவர்களும் யுவதி களும் மொத்தம் 100 பேர் என்று வைத்துக்கொள் வோம்; அவர்களில், ஸ்டுடியோக்களில் நிகழும் மற்ெருரு பரீக்ஷையில் 10 பேர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்டு நடிக நடிகைகளாக அமர்த்தப்படுவார்கள். இத்தனைக் கஷ்டங் கள் பட்டாகவேண்டும் நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுக்க வும், சினிமாவில் நடிகநடிகைகளாகசேரவும். இப்படி அவர் கள் கதாபாத்திரத்திற்கேற்ப நடிக நடிகைகளைத் தேர்ந் தெடுக்கும்போதே அவர்கள் தயாரிக்கும் படங்களில் நூற் றுக்கு தொண்ணூறு படங்கள்தான் வெற்றிபெற்றுவரு கிறதென்ருல் வீட்டிலிருந்துகொண்டே தங்களை நாடிவரும் நடிக நடிகைகளைத் (கதா நாயக நாயகிகளைத் தவிர்த்து) தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டு தயாரிக்கும் படங்கள் நூற்றுக்கு நூறு வெற்றிப்பெறும் என்று எதிர்பார்ப்பது எப்படிபொருந்தும்? குதிரைக் கொம்பை எதிர்பாப்பது போல்தான்.

மேல் நாட்டினர் ஒரு காவியத்தையோ அல்லது பண் டய சரித்திரத்தையோ சித்தரித்து ஒரு படமாகத் தயாரிக்க வேண்டுமானுல் அப்படத்தின் கதா பாத்திரத்திற்கேற்ற நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுப்பதில் எத்தனை சிரமம் இருந்தாலும், எத்தனை காலம் விரையமானுலும் அதைப் பொருட்படுத்தாது அவர்கள்கொண்ட காரியத்தைப் பூர்த்திசெய்கிருர்கள்.

உதாரணமாக, "மெட்ரோ கோள்டுவின் மேயர்ஸ்" (Metro Goldwin Mayor's) என்ற படக் கம்பெனியார் தாங்கள் தயாரித்த 'மேரி ஆண் டோனியட்' என்ற பிரென்சு தேசத்து மகாராணியின் பழங்கதையில், பிரென்சு ஸ்தானிகரின் பாத்திரத்திற்குத் தகுந்த நடிகன் தங்கள் கம்பெனி யில் இல்லாததினுல் அப்பாத்திரத்திற்கேற்ற ஒரு நடிகனைத் தேர்ந்தெடுக்க அவர்கள் செலவழித்த பணம்

கொஞ்ச நஞ்சமல்லவாம். அவர்கள் செலவழித்தப் பணம் நம் படமுதலாளிகளிடம் இருந்தால் இரண்டு படங்களை யெடுத்துத்தள்ளிவிடுவார்கள். கடைசியாக அப்பாத்தி ரத்திற்கு சற்றேறக் குறைய பொருத்தமான நடிகன் "ட்வண்டீயத் சென்சூரி பாக்ஸ் பிக்கர்ஸ்" என்ற கம்பெனியின் நடிகரான டைரன்பவர்தான் என்பதை யுணர்ந்ததும் அக்கம்பெனியார் உடனே 20th 'Century Fox கம்பெனிக்குச் சென்று டைரன்பவர் (Tyrone Power) என்ற நடிகரை குறிப்பிட்ட அந்த ஒரு படத்திற்கு மட்டும் நடிக்க ஒப்பந்தம் செய்துக்கொண்டு அப்படத்தைத் தயாரித்தார்களாம். அவர்கள் ஏன் தான் அத்தனைக் கஷ்டப்பட்டார்களோ! தெரியவில்லை அதற்குக் காரணம் பணத்தின்மேல் கொண்ட குறியா அல்லது கலையை வளர்க்க வேண்டுமென்ற கருத்தா? அந்த தீர்மானத்தை நேயர்களாகிய உங்களிடமே விட்டு விடுகிறேன்.

நம் படமுதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் சுபத்திரா வுக்கோ அல்லது அர்ஜுனனைக் கதாநாயகனாகக் கொண்ட புராணக் கதைகளுக்கோ, கதாநாயகனை அர்ஜுனன் பாத்திரத்திற்குச் சரியான நடிகரைத்தான் தேர்ந் தெடுக்க வேண்டுமென்பது அவசியமில்லை! இருக்கவே இருக்கிறார் ஒரு ஹொன்னப்பா, ஒரு சின்னப்பா, என்று விரல்விட்டு எண்ணக்கூடிய இரண்டொரு நடிகர் கள். அவர்களை ஒப்பந்தஞ் செய்துவிட்டால் போகிறது. "அர்ஜுனன் இப்படிதான் இருந்திருப்பான் என்று நாம் பார்த்தோமா என்ன" ஆகட்டும் என்று ஆரம்பித்து விடுவார்கள் பட தயாரிப்பை. அர்ஜுனனைக் கண்டவர் இப்போது யாரும் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அர்ஜுனனைப் பற்றி பத்தி பத்தியாக வர்ணித்துத் தள்ளி யிருக்கிறதே பாழும் புராணத்தில்; அதை ஒரு குறியாக வைத்துக்கொண்டாவது நடிகனைத் தேர்ந்தெடுக்கக் கூடாதா? போகட்டும் புராணத்தில் கூறியபடி அத்தனை யழகும் கூடிய ஒருவன் கிடைக்காவிட்டாலும் பத்திலொரு பங்கு அம்சங்கொண்ட ஒரு நடிகனைத் தேர்ந்தெடுக்க முடியாதா? முடியாதெனில் தமிழ்நாட்டில் உள்ள அத்தனைப்பேரும் அரூபிகளா? கர்ணகடூரமான

தோற்றமுடையவர்களா ? என்று கேட்கிறேன். புது முகந்தானேவேண்டும் ; இதோ புதுமுகம் என்று கூறுவதுபோல் டைரக்டர் சுந்தரம் அவர்கள் தம் அறிய முயற்சியினால் தயாரித்த சுபத்திரையில் ஸ்ரீ கணேச பாகவதரை அர்ஜுனனாக்கி நடிக்கச் செய்திருக்கிறார். நானும் தான் அன்று சுபத்திரையைப் (படத்தை) பார்க்கச்சென்றேன். நான் ஒரு புராணப் புத்தகப் புழு இல்லைதான் என்றாலும் என்னுடைய பாட்டனார் என் சிறு வயதில் சொல்லியிருந்த கதைக்கொஞ்சம் ஞாபகமிருக்கிறது. படம் ஆரம்பித்ததும் அக்கதையை என் மனதிற்குக் கொண்டுவந்துவிட்டேன். திரையில் காட்டப்படும் கதை எனக்கு சிறிதேனும் உணர்ச்சியையோ அல்லது குதூகலத்தையோ உண்டாக்கியதாக எனக்குத் தெறியவில்லை. என் பாட்டனார் சொன்ன பதினைந்து வருஷக் கதையே எவ்வளவோ ஸ்வாரஸ்யமாய் இருந்தது கேட்பதற்கு. தத்ரூபமாய் நிகழும் திரைக்கதை எனக்கு ஸ்வாரஸ்யத்தை யளிக்காதது எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. ஒரு வேளை நம் ஒருவனுக்குத்தான் இப்படித் தோன்றுகிறதோ என்று நினைத்தபோது என் பக்கத்திலிருந்த நண்பர் ஒருவர் "ஏன் சார் இதில் அர்ஜுனனே கிடையாதோ" என்று கேட்டார். அவர் கேட்டதற்கு நான் பதில்கூற இயலாதவனாய் தயங்கினபோது அவர் பக்கத்திலிருந்த மற்றொரு நண்பர் "அவர் தான் சார் அர்ஜுனன் அதோ அந்த ஒல்லியான மனுஷனுடன் பேசுகிறாரே அவர் தான் அர்ஜுனன் கணேச பாகவதர். பாட்டு புஸ்தகத்திலும் கணேச பாகவதர் அர்ஜுனன் என்றுதான் போட்டிருக்கிறது. இவரை ஏற்கனவே சிவலிங்க சாக்ஷியில் பார்த்து இருக்கிறோமே அதே பேர்வழிதான். அதே கணேச பாகவதர்தான் இந்த படத்திலும் அர்ஜுனன்" (பாட்டு புஸ்தகத்தில் பிரசுரித்திருந்த பிரகாரம்) என்றுசொன்னார். அவர் அப்படி சொன்னபோதுதான் பதினைந்து வருடங்ளுக்குமுன் என் பாட்டனார் சொல்லிப்போன அந்த ஆணழகன் அர்ஜுனன் சம்பந்தப்பட்டக் கதை என்பதை உணர்ந்தேன். 'அடபாவமே. ஆணழகனை அந்த அர்ஜுனனை இப்படி இருந்திருப்பான் ? இந்த கர்ணகடூரமான தோற்றமுடைய ஒருவனையா நம் தாத்தா அவ்வளவு பெருமையாக ஆணழகன் அர்ஜுனன், அப்படி, இப்படி என்றெல்லாம்

புளுகிவிட்டு சென்றார்' என்று 'நான் வாய்விட்டுக் கூறினதை என் பின்புறமாக இருந்த ஒருவர், "ஆமாம் சார் அர்ஜுனன் என்னமோ மகா அழகன் என்றுதான் நானும் படித்திருக்கிறேன் கேள்வியும் பட்டிருக்கிறேன். அது உண்மைதான் ஆனால் இந்த முதலாளி-டைரக்டர் இருக்கிறாரே ஸ்ரீசுந்தரம் அவரின் கண்ணாடியணிந்த கண்ணுக்கு இந்த கணேச பாகவதர்தான் அழகாக தோற்றமளித்தார் போலும்" என்றார். அதன் பிறகுதான் 'அப்படி முடிந்ததா இது' என்று நான் பெருமூச்செறிந்தேன்.

அடகடவுளே! புராணக்கதை ஒருவேளை நிஜமாய் நிகழ்ந்திருந்து அந்த புராணத்தில் சம்பந்தப்பட்ட மகா அழகன் அர்ஜுனன் இந்த கர்ணகடூரமான அர்ஜுனனைக் கண்டிருப்பானேயாகில் நிச்சயம் அவன் நாக்கைப் பிடுங்கிக் கொண்டாவது உயிர் நீப்பான் என்பது திண்ணம். இப்படி ஒருமுதலாளி ஒரு நடிகனைத்தேர்ந்தெடுப்பதின் கருத்துதான் என்ன? இந்த முதலாளி தம் சுபத்திரையின் மூலம் கலையைவளர்க்கப் பிரயாசைப்பட்டிருக்கிறாரா அல்லது கணேச பாகவதரைக்கொண்டு குறைந்த சிலவில் படமெடுத்து பணத்தைப் பெருக்க முயன்றிருக்கிறாரா? "அதெல்லாம் ஒன்றுமில்லை ஒரு புது முகத்தை (ஒரே படத்தில் நடித்த கணேச பாகவதரை) முன்னணிக்குக் கொண்டு வரவே இந்த ஏறபாடுசெய்தேன்" என்று ஸ்ரீ சுந்தரம் சொல்வாரானால், அவருக்காக (கணேச பாகவதருக்காக) அவர் தோற்றத்திற்குத் தகுந்தாற்போல ஒரு கதையைத் தேடி அதில் நடிக்கவைத்து அவருக்குப் புகழை ஏன் சம்பாதித்துக் கொடுத்திருக்கக்கூடாது. இந்த முதலாளி டைரக்டர் ஸ்ரீ சுந்தரம்? இப்படி எழுதுவதால் கணேச பாகவதரை நான் தாக்கி எழுதுவதாகவோ அல்லது அவரைக் கீழ்ப்படுத்துவதாகவோ கருதவேண்டாம். அவர் என்ன செய்வார் பாவம்; ஆடு என்றால் ஆடுகிறவர் பாடு என்றால் பாடுகிறவர் அவரைச் சொல்வதில் என்னபயன். படத்திற்கு முதல் ஆளாகநிற்கும் முதலாளியே கலைக்கு முட்டுக்கட்டையாக நிற்கும்போது கணேச பாகவதரைப் போன்ற நடிகரைக் குறைக்கூறி என்ன பிரயோசனம்?

**சமூகப்படம்வேண்டும்:**—ஏட்டின் மூலமாகப் படித்

தும், பிரசங்கிகளின் வாயிலாகக்கேட்டும் பேசும்படத்தின் மூலமாகப்பார்த்தும் சலித்துப்போன புராணக் கதைகளை யே நம் படமுதலாளிகள் தேர்ந்தெடுப்பதின் கருத்துதான் என்ன என்று விளங்கவில்லை. அதுவும் ஏற்கனவே இரண்டு மூன்று தடவை தயாரிக்கப்பட்ட அதே புராணக் கதையை மீண்டும் தயாரிப்பதால் இம்முதலாளிகள் கலைக்காக அரும் பாடுபட்டுழைக்கிறார்கள் என்று அர்த்தமா? அல்லது "ஏற்கனவே வெளிவந்துள்ள படங்கள் வெற்றிப் பெற வில்லை, ஆனால் அதே கதையை நான் கையாண்டு என் மேல் பார்வையில் தயாரிப்பேனாகில் அக்கதை ஏன் வெற்றிப் பெறாது" என்ற மனப்பாண்மையா? அப்படி மார்தட்டி தயாரிக்கப்படும் படங்கள்தான் வெற்றிப் பெறுகிறதா? அதுவும் கிடையாதே! அந்தோ படமுதலாளிகளே! உங் களை நீங்கள் உணரமுடியாதா? புராணப் படங்களை யெடுத்து அதன் வாயிலாக சம்பாதித்துக் குவிக்கும் பணத் தை சமூகப்படங்களைத் தயாரித்து சம்பாதிக்கக்கூடாதா? சமூகப்படங்கள் நிறைய வசூலைக்கொடுக்காது என்ற பயமா? அப்படியானால் நம் வடநாட்டார் தயாரிக்கும் படங்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதம் சமூகப் படங் களாகத்தானே வெளிவருகிறது. அவர்களுக்கு வசூல் அளிக்கவில்லையா? 25வது வாரம் 50வது வாரமென்று தான் ஓடிக்கொண்டிருக்கவில்லையா? அதிலும் நம் தமிழ் நாட்டில் 25, 50 வாரமென்று ஓடுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கவில்லையா? தற்காலத்திற் கேற்றபடியும் வருங்காலத்தை உத்தேசித்தும் அரசியல் பொருளாதாரத் தையொட்டியும் எழுதப்படும் சமூகக் கதைகளைப் பட மாகத் தயாரித்துக் காட்டினால் பொதுஜனங்களுக்கு எவ் வளவு தெளிவையுண்டுபண்ணும்? அறிவை யூட்டும் அறி யாமையைப் போக்கும் என்று சற்று சிந்தித்துப்பார்க்க நேரமில்லையா இந்தப் படமுதலாளிகளுக்கு என்று கேட் கிறேன். சமூகக் கதைகளே நம் நாட்டில் கிடையாதா? அல்லது சமூகக் கதைகளை எழுதக்கூடிய எழுத்தாளர் கள்தான் நம் நாட்டில் பஞ்சமா? கலைச் சந்தையிலே எண் ணிறைந்த எழுத்தாளர்கள் மலிந்துகிடக்கின்ற இந்தத் தரு வாயிலே எழுத்தாளர்கள் இல்லையென குறைகூறுவது கை யில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்யிக்கலைவது போல்தான். இதுவரை எத்தனையோ நண்பர்கள், பத்திரி

கையின் வாயிலாக சமூகக் கதைவேண்டும், சமூகப் படங்களே தயாரிக்கப்படவேண்டும் என்று பத்தி பத்தியாக எழுதியும், எழுதிக்கொண்டும் வரும்போதே செவிகொடாத இந்தப் பட முதலாளிகள் என் ஒருவன் கோரிக்கைக்கா செவிகொடுக்கப் போகிறார்கள்? செவிடன் காதில் எத்தனை சங்கைதான் ஊதி என்னப்பயன்? ஆனால் ஒன்று நிச்சயம்; இந்த முதலாளிகள் இதேமாதிரி நேயர்களின் கோரிக்கையை நிரகாரித்துக்கொண்டே வருவார்களானால் கூடிய சீக்கிரத்தில் சினிமா கலையே இருக்குமிடந்தெரியாமல் போய்விடும். (இப்போதுமட்டும் சினிமா கலை என்று ஒன்று நம் தமிழ் நாட்டில் இருக்கிறதா? என்று கேட்டு விடாதீர்கள்). மறைந்துக்கிடக்கும் சினிமா கலையை சித்திரவதைசெய்து அதை ஆழ குழிதோண்டி, மீண்டும் வெளிக்கிளம்பாவண்ணம் புதைத்து விடுவார்கள் என்பது திண்ணம்.

தவிர நம் பட முதலாளிகள் படங்களைத் தயார்செய்ய முன்வருவதின் நோக்கங்கள் பல; அதில் பணம் ஒன்று. இரண்டாவது கன்னியர்வேட்டை. முன்னதைவிட பின்னது தான் மிகவும் முக்கியமான நோக்கமாகக் கருதுகிறார்கள் பெருவாரியான பட முதலாளிகள். இத்தகைய முதலாளிகளா கலைக்குப் பாடுபடுகிறவர்கள்? இவர்களால்தானா நம் தமிழ்நாட்டு சினிமா கலை வளரப்போகிறது? கலை வளர்க்குமிடத்தில் கற்பாதான கைங்கர்யமளிக்கும் இவர்களா கலையை வளர்க்க முயற்சிப்பார்கள்? நிற்க, அவர்களின் யோக்கியதாம்சத்தை சற்று கவனிப்போம். சகல அம்சங்களுடன் கூடிய ஒரு நங்கைக்கு, இன்றைய சினிமா நக்ஷத்திரங்களிடையே (இவர்கள் நக்ஷத்திரங்கள் என்று கூறிக்கொள்வது எவ்வகையில் பொருந்துமோ யார் அறிவார்?) தானும் ஒரு நக்ஷத்திரமாக திகழவேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே தோன்றுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பெண் சில தரகர்களின் மூலமாக படத்தில் நடிப்பதற்காக ஒரு பட முதலாளியைப் பேட்டிகாண வருவாள். அம்மங்கையைப் பார்த்ததும் உடனே பட முதலாளியின் தலைக்கேறிவிடும் காமம். கண்கள் கர்ணம்போட ஆரம்பிக்கும்; இந்நிலையில் அவர் பேசுவதுகூட இன்னதென்று தோன்றாதவராய் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு

காமத்திற்கடங்காதவராய் உள்ளே சென்றுவிடுவார். அதை யறிந்துக்கொண்டதுபோல் முதலாளியின் கையாள் ஒருவர் அப்பெண்ணுக்கு உபதேச மொழிகளை போதிக்க ஆரம்பிப்பார். அவளிடம் "செட்டியார் மனம்வைத்தால் உன்னை பெரிய நக்ஷத்திரமாக்கிவிடுவார். அவர் சொல்கிறபடி மாத்திரம் நீ நடந்துக்கொண்டால் அடுத்தப் படத்திலேயே நீ தான் கதாநாயகி" என்று ஒன்றும் பாதியுமாகப் புளுகி அவளை எப்படியாவது படிய வைத்துவிடுவான். அவ்வளவுதான் அன்றையலிருந்து அம்மங்கை தான் முதலாளியின் (அ)தர்மப்பத்தினி. சின் நாட்களுக்குள் அப்பெண்ணின் உருவமே மாறிவிடும். கொஞ்ச நாளைக்குமுன் மோகன உருவத்துடன் காக்ஷியளித்த அந்நங்கை இப்போது ஒட்டின தவடையுடன்தான் காக்ஷியளிப்பாள். முன்பு அவளை தாம்பாளத்திலேந்திக் கொண்டிருந்த முதலாளி இப்போது கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. அன்று முதலாளியின் காதலியாக இருந்தவள் இன்று ஒருசாதாரண எக்ஸ்ட்ராநடிகனின் காதலியாக இருக்கக்கூட அருகதையற்றவாளாகிவிடுவாள். இதுவும் இவள் விதிதானே? பாவம் சினிமா நக்ஷத்திரமாக விளங்க வேண்டும் என்ற பேராசையினால் தன் கற்பையே கலைக்காக அற்பணிக்க எண்ணினாள். ஆனால் அவள் கலைமேல் கொண்ட ஆவலை யறிவானா அந்த காமப்பித்தன். கலையைக் கண்டானா, கத்திரிக்காயைக்கண்டானா; கரும்பைக்கண்டு காதல் கொண்டான், கரும்பின் ரசத்தைப் பருகிவிட்டு சக்கையை வீசியெறிந்துவிட்டான். கொண்டதே கோலம் கண்டதே காக்ஷி என்ற இத்தகைய முதலாளிகளைப் போன்றவர்களா மேல்நாட்டு முதலாளிகள்? காதலும் காமமும் எல்லோருக்கும் உள்ளதுதான். ஆனால் இப்படி கண்ட கண்ட பேர்களைக் கற்பழித்து தெருவில் விட்டுவிடுவதா காதல்? மேல் நாட்டிலும் காதல், காமம் இல்லையென்றுகூற முன்வரவில்லை. அவர்களும் காதல் கொள்ளுகிறார்கள். ஆனால் கண்டகண்ட பேர்களையல்ல. ஒருவளைக் காதலித்து அவளையே கல்யாணமும் செய்துக்கொள்ளுகிறார்கள். நிற்க, கண்ட கன்னிகளைக் கற்பழித்து அதன் வாயிலாகத் தங்கள் காம இச்சையைப் பூர்த்திசெய்துக்கொள்ளும் முக்கிய நோக்கங்கொண்டே சிலர் பட முதலாளிகளாகவும் மாறிவிடுகிறார்கள் நம் நாட்டில். இவர்களைக் கண்டு கலா

தேவியே அஞ்சுகிருள் என்ருல் அதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது? இத்தகையவர்களை இப்பொழுது கலையுலகம் ஏன் தான் தாங்கிக்கொண்டிருக்கிறதோ தெரியவில்லை.

இன்னும் சிலபடமுதலாளிகள் தாங்களே டைரக்டுசெய்யவும் துணிந்துவிடுகிருர்கள். அப்படி அவர்கள் டைரக்டு செய்யும் படத்தில் என்ன விநோதத்தை எதிர்ப்பாரக்கலாமென்ருல் அவர்கள் தயாரிக்கும் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் கதா நாயகி (தங்களுடைய அன்பிற்குப் பாத்திரமாகி ஆசை நாயகிகளாகக் கருதப்படுகிறவர்கள்) களுக்குப் பிரதம பாகத்தையளிப்பதுமின்றி அவர்களின் வெற்றிக்கே (படத்தின் வெற்றிக்கல்ல) அரும்பாடு பட்டுழைப்பார்கள். எப்படியெனில் ஒரு முதலாளி தான் தயாரிக்கப்போகும் படத்தை தானே டைரக்டு செய்கிருரென்று வைத்துக்கொள்வோம். பிரபல சினிமா நடிகையான தன் ஆசை நாயகிதான் அப்படத்தில் நடிக்கவேண்டுமென்று அவருக்குப்பட்டதும் அந்த அம்மையாருக்குப் பொருத்தமான ஒரு கதையை தானே தேட ஆரம்பிப்பார். அப்படத்தில் முக்கியப் பாத்திரங்களில் நடிக்கவிருக்கும் பெரிய பெரிய சினிமா நடிக நக்ஷத்திரங்களைக்கூட அவர் கவனிக்கமாட்டார். அப்படத்தில் நூற்றுக்கு எண்பது பாகம் தன்னுடைய ஆசை (கதா) நாயகியின் சௌந்தர்ய ரூபமே பிரதிபலிக்கும்படி செய்வார். போதாக்குறைக்கு அந்தம்மையாரை நடன ராணியாக்கிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் படமுழுதிலுமே விதவிதமான ஆபாச நடனங்களைப் புகுத்தி படத்தைக் குட்டிச்சுவராக்கிவிடுவார். கையையும் காலையும் உதைத்துக்கொண்டு ஆடுவது அவர் கண்ணுக்கு நடனம் என்று தோன்றுமோ என்னமோ. ஆமாம் ஆமாம் அதுவும் சரிதான்; சினிமா கலையைமட்டும் கொலைசெய்தால் என்ன பயன், நாட்டிய கலையையும்கூட கொலை செய்தால்தானே தன்னுடைய ஆசை நாயகியை நாட்டிய ராணியாக ஆக்கமுடியும்! ஒரு படத்தை ஆக்கவோ அழிக்கவோ இவர் கையில்தானே இருக்கிறது; அவர் எப்படி செய்தால்தான் என்ன! அவருடைய ஆதிக்கத்தைக் காமிராகாரரிடம் கூடசெலுத்துவார். தன் நாயகியாரை (கதாநாயகி) விதவிதமான "க்ளோஸ்அப்" "ஆங்கிள்" போன்ற ஷாட்டுகளைப் பிரயோகித்து அந்த அம்மணியின்

சந்திர பிம்பத்தை படத்தில் தோன்றுவிக்கச் செய்வார். அதுமட்டுமா அந்தம்மையார் தான் ஏற்கனவே ஓரிரண்டு படங்களில் தோன்றி பாடியும் இருக்கிறார்களே. அதனால் இந்தப் படத்திலும் அநாவசியமான இடங்களில்கூட பாட்டைப் புகுத்திவிடுவார். அந்த நடிகை, மன்னிக்கவும், அம்மையார் தம்முடைய இனிய குரலால் காட்டுக்கத்தலை யெழுப்பிவிடுவது படமுதலாளிக்கு இன்பத்தையளிக்கிறது போலும். படம் பார்ப்பவர்களை தியேட்டரை விட்டே ஓடிவிடும்படி செய்யும் அந்த இன்னிசையை 'ராஜன் மெச்சினது ரம்பை' என்பதுபோல அவரே அதை அநுபவித்து ரசிக்கவும்செய்யட்டும். அதை நமக்கு அளிக்கவேண்டாமே! இத்தகைய பட முதலாளிகள் கலைதாசர்களா? அல்லது கன்னிதாசர்களா? கலைக்குத் தொண்டாற்றும் கலைஞர்களா? அல்லது கன்னியருக்குச் சேவைசெய்யும் காமுகர்களா? என்றுதான் கேட்கிறேன்.

சில படமுதலாளிகள் பணவசூலைப் பெரிதும் கருதி ஆபாசமான ஹாஸ்யங்களை அசம்பாவிதமான வகையில் புகுத்தி மக்களைப் பைத்தியக்காரர்களாக்கி விடுகிறார்கள். சில படங்களில் காட்டப்படும் ஹாஸ்யங்கள் படம்பார்க்க விரும்பும் அறிஞர்களைக்கூட அறிவீனர்களாக்கி, அவர்களை மீண்டும் சினிமாவே (தமிழ் படத்தையே) பார்க்க வொட்டாமல் செய்கிறது. இதனால் அறிஞர்கள் தமிழ் படத்தைக்கண்டு ரசிக்க முடிகிறதா என்றெண்ணிப்பாருங்கள். அநாவசியமான காமிக்குகளை படத்தில் புகுத்துவதினால் படத்தின் விறுவிறுப்புக் குறைந்துவிடுகிறது. படத்தின் விறுவிறுப்பைத்தான் "டெம்போ" என்றுகூறப்படுகிறது. படத்தில் விறுவிறுப்பு, அதாவது "டெம்போ" (Tempo) இல்லையென்றால் படம்பார்ப்பதற்கே சுவையில்லாமல் போகிறது. (Tempo) டெம்போ இல்லாத படம் உப்பில்லாப் பண்டம்போல் தான். ஒரு பக்ஷணத்திற்கு உப்பு எவ்வாறு அவசியமோ, அவ்வாறே பேசும் படத்திற்கும் டெம்போ இன்றியமையாதது என்றுசொன்னால் மிகையாகாது. இங்ஙனம் படம் விறுவிறுப்பாகச் செல்லுமிடத்தில் திடீரென்று காமிக்கு தோன்றி காக்ஷியளிப்பதினால் படத்தின் டெம்போ குறைந்து சுவாரஸ்யம் அற்றுப்போகிறது. நான் இப்படி எழுதுவதினால் படத்தில் காமிக்கே இருக்கக்

கூடாது என்று அர்த்தமல்ல ; படத்தில் ஹாஸ்யம் இருக்க வேண்டியதுதான். ஆனால் கதைக்கே சம்மந்தப்படாவண்ணம் காமிக்கைசேர்த்துக் காட்டக்கூடாது என்பதுதான் என் கருத்து. அப்படி ஹாஸ்யத்தையே பெருவாரியாக விரும்பும் படமுதலாளிகள் வேண்டுமானால் முழுநீளக் காமிக்குப் படங்களைத் தயார் செய்துகொள்ளட்டுமே, யார் வேண்டாமென்று தடைசெய்யமுடியும் ?

மேற்சொன்னவாறு, பணத்தைப் பொருட்டாக மதிக்காமலும் சினிமா நக்ஷத்திரங்களை ஆசை நாயகிகளாக ஆக்கிக்கொண்டு அவர்களுக்குச் சலுகைக் காட்டாவண்ணமும், அசம்பாவிதமான காமிக்குகளைச் சேர்த்து படத்தின் விறுவிறுப்பைக் குறைக்காமலும், பெரும்பாலும் சமூகக் கதைகளையே சீர்த்திருத்த முறையில் தயாரித்தும், சினிமா கலையை ஒரே யடியாக இல்லாவிட்டாமலும் சிறிது சிறிதாவது வளரச்செய்யவும் நம்தமிழ்பட முதலாளிகள் முன்வருவார்களா? அப்படி இனியும் சினிமா கலையை கொலை செய்து வருவார்களானால் அது நம் தமிழ் நாடு செய்த தீவினைப் பயன்தான் என்றெண்ணி ரத்தக் கண்ணீர்விட வேண்டியதுதான். வேறென்ன செய்யமுடியும்!

***நிர்வாகஸ்தர்கள் :***—பட முதலாளிக்கு அடுத்து நிற்பவர் படநிர்வாகஸ்தர்தான். சினிமா திரைக்குத் தகுந்த கதையைத் தேர்ந்தெடுத்து கதாசிரியருடன் ஒத்துழைப்பது, படம்வெற்றிப்பெறத்தக்க ஆலோசனைகளை முதலாளிக்கும், டைரக்டருக்கும் அவ்வப்போது எடுத்துக்கூறி படத்தின் வெற்றிக்காக உழைப்பதும்தான் நிர்வாகஸ்தரின் வேலையாகக் கருதப்படுகிறது. ஒரு படத்தையாரம்பித்து அதை வெளியிடும் வரை, அதன் முழுப்பொருப்பையும் ஏற்று வேலை செய்யக்கூடியவர்கள் பட நிர்வாகஸ்தர்கள்தான் என்று சொன்னால் மிகையாகாது.

நம் நாட்டில்தான் நிர்வாகஸ்தர்களின் பொருப்பை பட முதலாளிகளே வகித்துக் கொண்டுவிடுகிறார்களே. ஆனால் நம் நாட்டின் சில ஸ்டுடியோக்களில்மட்டும் நிர்வாகஸ்தர்களை யமைத்துக்கொண்டு இருப்பது சற்று போற்றுதற்குரியதுதான்.

***பட டைரக்டர்கள் :***—டைரக்டர் என்றால் என்ன? அவர்களின் பொறுப்பு எத்தகையது? அவர்களின் கடமை

என்ன ? இவைகளைத் தெரிந்துக் கொள்ளவேண்டியது ஒரு டைரக்டரின் முதல் வேலை. டைரக்ஷன் (Direction) என்ருல் திசையெனப் பொருள்படும். ஒரு படத்தின் வெற்றிக்கான சரியான பாதையை (திசையை) நடிக நடிகைகளுக்குக் காட்டும் வழிகாட்டி தான் டைரக்டர் என்றுகூறலாம். சினிமா கலை நுணுக்கங்களைச் சரிவரக் கற்றுணர்ந்து சினிமா கலைக்கே பாடுபட்டுழைக்கும் தமிழ் பட டைரக்டர்களே தற்சமயம் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். சற்றேறக்குறைய, தன் வாழ்க்கையின் ஒரு பகுதியையாவது சினிமா கலைக் கற்பணித்து, கூடுமான வரையில் சுமாரான படங்களாகவே (ஏனைய தமிழ் படங்களைக் காட்டிலும் பலவகையில் சிறந்த முறையில்) தயாரித்துவந்த ஓர் டைரக்டர், ஏன் டைரக்டர்களின் ராஜா என்றுகூட சொல்லலாம்; அத்தகைய டைரக்டர் ராஜாவை நம் தமிழ் நாடு இழந்துவிட்டது தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டம் தான் என்று சொல்லவேண்டும்.

தற்சமயம், தமிழ் படத்தை டைரக்டுசெய்யும் பொருப்பை, தமிழே தெரியாத ஆங்கில, வடநாட்டு டைரக்டர்கள் ஏற்றுக்கொண்டு படத்தைக் குட்டிச்சுவராக்கி வருவதோடுமின்றி, சினிமா கலையை வேறு சித்ரவதைச்செய்தும் வருகிருர்கள். இத்தகைய டைரக்டர்கள் ஏன்தான் தமிழ் படத்தை டைரக்டுசெய்ய முன்வருகிருர்களோ நாமறியோம். நம்மவர்களில் சிலர் 'நாம் கொஞ்சம் சினிமா துறையில் அநுபவம் பெற்றிருக்கிருேம்' என்ற கருத்து உதித்ததும் தமிழ் படத்தை டைரக்டுசெய்ய முன்வந்துவிடுகிருர்கள். அதற்குக் காரணம், கலைமேல் வைத்திருக்கும் ஆர்வமோ, அல்லது பணத்தின்மீதுள்ள பற்ருே யாரறிவார் ? இத்தகையவர்களால் டைரக்டு செய்யப்பட்டு வெளிவரும் படங்கள்தான் வெற்றிப்பெறுகிறதா என்ருல் அதுதானே இல்லை. முழுமோசமாய் போகிறதே. இந்த டைரக்டர்களின் ஆபூர்வ சக்தியையும், கரையற்ற கர்பனையையுங்கண்டு வடநாட்டு பத்திரிகைகள் பலவாருக வர்ணித்து எழுதுவதும் எழுதிவருவதும் நாம் அறியாததல்ல. நம் தமிழ் பத்திரிகைக்காரர்கள்தான் படமுதலாளிகட்கும் பட விநியோகஸ்தர்களுக்கும் கட்டுப்பட்டு அவர்களின் அன்பிற்கு நிரந்தரப் பாத்திரமாகி, கண்ணற்ற கபோதிகள்

கூட காண அருகதையற்றப் படங்களையும் வானளாவிப் புகழ்ந்து எழுதிவந்தாலும், வடநாட்டுப் பத்திரிகைக்காரர்களாவது (உதாரணமாக Film India) பாரபக்ஷமற்று குற்றங்குறைகளை எடுத்துக்காட்டியும், ஆபாசங்களைக் கண்டித்தும் எழுதிவருவதைப்பற்றி சிந்திக்குங்காலத்து, நம் நாட்டிலும் ஏன் அத்தகைய பத்திரிகாசிரியன் ஒருவன் உதிக்கக்கூடாது என்றுதான் வருந்தவேண்டியிருக்கிறது.

"தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா" என்று பாரதியார்

பாடிசென்றதை நினைக்கும்போது நம் தமிழ் நாட்டின் மேன்மையை யறிகிறோம். அதுமட்டுமா "கம்பன் பிறந்த தமிழ் நாடென்றும், வள்ளுவனை உலகுக்குத் தந்து வான் புகழ்பெற்ற தமிழ் நாடென்றும்" நம் தமிழ் நாட்டின் சிறப்பைப் பற்றி சித்தரிக்கும்போது அத்தகைய தமிழ்நாட்டிலா இன்று கலைக்குப்பாடுபடும் ஒரு கலைஞன் இல்லாமல் போய்விட்டான் என்று எண்ணவேண்டியிருக்கிறது. சினிமா ஒரு கலையல்ல, அதற்காக நாங்கள் உழைக்க வேண்டியதில்லையென்று சொல்வார்களானால் சினிமாவை அடிப்படையாகக்கொண்டும், அதன் சாரத்தையே பிரதிநிதித்துவமாக எடுத்துக்கொண்டும், அதன் மூலப்பொருளையே பெயராகக் கொண்டும் பத்திரிகை ரூபமாக வெளிவருதின் நோக்கமென்ன? ஒருவேளை பிழைக்கும் வழிகளில் இதுவும் ஒன்றோ என்னமோ. வடநாட்டுப் பத்திரிகை நம் நாட்டுப் படத்தைத் தாக்கி எழுதும்படி நாம் ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும்?

ஒரு படம் வெற்றிப் பெறுவதோ அல்லது தோல்வியை யடைவதோ அது பட டைரக்டரைத்தான் சாரும். சினிமா கலையைச் சரிவரக் கற்றுணர்ந்து, அதன் நுணுக்கங்களையும் பூரணமாக அறிந்துக்கொண்டாலொழிய டைரக்ஷன் பொருப்பை ஏற்றுக்கொள்வது உசிதமன்று. சினிமா கலையை படித்துணராவிட்டாலும், சினிமாவில் நல்ல அநுபவ தேர்ச்சியாவது அடையப் பெற்றிருக்கவேண்டும்.

தற்சமயம் நம் நாட்டில் சிறந்த டைரக்டர்கள் என்று சொல்லிக்கொள்ளும் டைரக்டர்கள் பெரும்பாலும் தமிழ் பாஷையே அறியாதவர்கள்தான். இங்ஙனம் தமிழ் பாஷை

யறியாதவர்கள் தமிழ் படத்தை டைரக்டு செய்தால் அப்படம் எப்படி வெற்றியடையமுடியும்? அவர் மனதில் தோன்றும் கற்பனை சக்தியைதான் எவ்வாறு படத்தில் புகுத்தமுடியும்? தமிழில் சொன்னாலேயே அதை விளக்கிக் கொள்ளக்கூடாத நம் தமிழ் நாட்டு தவ நடிக நடிகைகள், பிறபாஷையில் டைரக்டர் விளக்கஞ்செய்வதையா சரிவர உணர்ந்து நடிக்கக்கூடும்? தமிழரல்லாத டைரக்டர் (ஆங்கிலேயரோ அல்லது வடநாட்டாரோ) ஒருவர் தயாரித்தபடம் 25-வது வாரம் 50-வது வாரம் என்று வெற்றியுடன் ஓடியும் ஓடிக்கொண்டுமிருக்கிறதே யென்று கேட்டுவிடாதீர்கள். ஒரு படம் நீண்ட நாளாக ஒடுவதாலேயே அதை வெற்றிகரமான படம் என்று கூறிவிடமுடியாது. அப்படி நீண்டநாள் ஓடுவதின் காரணம் அப்படத்தில் இசைவிருந்தளிக்கும் நடிகனோ அல்லது நடிகையாகவோ இருக்கலாம். டைரக்டரல்லயென்பது ஞாபகமிருக்கட்டும்.

படம் தமிழ் படம், அதை டைரக்டு செய்வதோ ஒரு ஆங்கிலேயன், வடநாட்டான், தெலுங்கன் இத்தகையவர்கள். ஏன் நம் தமிழ் நாட்டில் அத்தகைய டைரக்டர்களே இல்லையென்ற கருத்தா; அல்லது தமிழ் படத்தைத் தமிழர்களே டைரக்டுசெய்தால் மதிப்பில்லையென்ற நோக்கமா? அல்லது தமிழர்களுக்கு ஆற்றலில்லையென்ற எண்ணமா? நான் பிறநாட்டாரின்மீது வெறுப்புக்கொண்டு இப்படி எழுதுவதாகக் கருதவேண்டாம். பிறபாஷையினர் மற்றொரு பாஷையில் படத்தைத் தயாரிப்பதால் எங்ஙனம் சினிமா கலை வளரமுடியும் என்பதுதான் என்கருத்து. தமிழ் டைரக்டர்களில் சிறந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் டைரக்டர்கள் ஓரிரண்டு பேர் (அதுவும் என்னால் கண்டிப்பாக சொல்லமுடியாது) இருக்கிறார்கள் என்றால அவர்களாவது சினிமா கலைக்கு உழைக்கிறார்களா என்றால் அதுதான் கிடையாது. சற்றேறக் குறைய கலை நுணுக்கங்களை யறிந்தவர்களாயுமிருப்பார்கள். சினிமா கலையை வளர்க்கவேண்டுமென்ற ஆவல் அவர்கள் உள்ளத்திலுமிருக்கலாம். அதற்காக தங்களுடலையே அற்பணிக்கவும் தயங்கமாட்டார்கள். என்ன இருந்துதான் என்ன; சினிமா நடிகைகளின்மேல் கொண்ட காதல், இல்லை, காமமல்லவோ குறுக்கே நின்று தடுக்கிறது.

ஒரே நடிகையை கதா நாயகியாகக்கொண்டு இரண்டு படங்கள் ஒரே டைரக்ஷனின்கீழ் தயாரிக்கப்பட்டதென்றல் மறு படத்தில் அந்த நடிகை மேற்சொன்ன டைரக்டரின் அன்பிற்குப் பாத்திரமாகிவிடுவாள். அப்படத்தில் பாருங்களேன், அபாரமான சலுகைக் காட்டப்படும் அந் நடிகைக்கு. அந்தோ கன்னியர்மீது கொண்ட மோகம் கலை மீது கொள்ளக்கூடாதா ?

மேல்நாட்டு டைரக்டர்களைப் பாருங்கள். சினிமா உலகமே யழிந்து சினிமாவின் நாமதேயமே அழிந்தாலும் அழியலாம்; ஆனல் "காற்றேடு போயிற்று" (Gone with the wind) என்ற மேல்நாட்டுப் படத்தைத் தயாரித்த டேவிட் ஓ செல்ஜினிக் (David O. Selznick) என்ற பட முதலாளி-டைரக்டரின் பெயர் மறையாது என்பதை அப் படத்தைப் பார்த்தவர்களே அறிந்துக்கொள்ளலாம். மேல் நாட்டுக்கு ஒரு டேவிட் ஓ. செல்ஜினிக் என்பதுபோல் நம் வடநாட்டிற் கோர் ஷாந்தாராமாவது இருக்கிருர். நம் தமிழ் நாட்டில் அத்தகைய டைரக்டர் ஒருவர் இதுவரையில் இல்லாவிட்டாலும் இனியாவது தோன்றமுடியுமா என்பதை நாம் கற்பணிக்கக்கூட இடமில்லாமலிருக்கிறதே. தமிழ் தாயே, சினிமா கலைக்குப் பாடுபடும் டைரக்டர் ஒருவரை எங்களுக்கு ஈன்றளிக்கக்கூடாதா ?

ஒளிப்பதிவு, ஒலிப்பதிவில் கைதேர்ந்தவர்கள் அதிகம் பேர் இல்லையென்ருலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிருவராவது நம் தமிழ் நாட்டு ஸ்டுடியோக்களில் இருக்கின்றனர் என்று சற்று சந்தோஷிக்க வேண்டியதுதான். ஆனல் அவர்களில் ஒருவராவது தமிழராய் இருக்கவில்லையே என்னும் வருத்தந்தான். ஒருவர் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவரென்ருல் மற்ருெருவர் ஒரு வடநாட்டு சகோதரராய் இருப்பார். தமிழர்கள் ஏன் அக்கலையை கற்று சிறந்த ஒளிப்பதிவாளராகவும், ஒலிப்பதிவாளராகவும் விளங்கக் கூடாது. தமிழர்களாகிய நமக்கு கலைஞானமில்லையா ? அல்லது ஆர்வமில்லையா ? நம் ஞானத்தையும், ஆர்வத்தையும் இதில் ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது ?

**கதாசிரியரும் பாட்டாசிரியரும் :—** ஒரு கதையை சினிமாவுக் கேற்றவாறு அமைத்து, படித்தவர்களும், பாமரர்

களும் எளிதில் புரிந்துக்கொள்ளும் முறையில் வசனங்களை யமைத்துக்கொடுப்பது கதாசிரியரைப் பொருத்தது. ஒவ்வொரு அம்சத்தில் வெற்றிப்பெற்ற தமிழ் படங்களில், ஓரிரண்டு படங்கள் வசன அமைப்புதான் காரணம் என்று முன்னமே சொல்லப்பட்டது. ஜூபிடரின் "கண்ணகியும்", உமா பிக்சர்சாரின் 'தமிழரியும் பெருமாளும்' ஒருவாறு வெற்றியடைந்தது அவைகளின் வசன அமைப்பே காரணம் அதன்பெருமை இளங்கோவன் (தணிகாசலம்) அவர்களைத் தான் சாரும். என்றாலும் அவர் வசனமெழுதும் ஒவ்வொரு படத்திலும் ஏன் அவ்வாறே வசனங்களையமைத்துத் தமிழின்பத்தை எல்லோருக்கு மளிக்கக்கூடாது என்றுதான் விளங்கவில்லை.

சங்கீத டைரக்டர் (Music Director) அமைத்துக் கொடுக்கும் வர்ண மெட்டுகளின்படி கதைக்கேற்றவாறு பொருளமைத்துப் பாடல்களைத் தயாரிப்பது பாட்டாசிரியரின் பொருப்பு. பாட்டின் கருத்து மிக அழகாகவும் அக்கருத்தை எல்லோரும் எளிதில் அறிந்துக்கொள்ளும்படி எளிய நடையிலும் சினிமா கதைக்குப் பாட்டு எழுதுவது தான் சிறந்தது. அப்படி எழுதுவதில் இன்றைய தமிழ் நாட்டு சினிமா உலகில் புகழடைந்துவிட்டவர் யார் என்று கேட்டால் ஸ்ரீ பாபநாசம் சிவன்தான் என்று சிறுபிள்ளைக் கூட சொல்லும்.

இங்ஙனம் கதை, வசனம், பாட்டு இவைகளை இயற்றிய பிறகு அதை சோபையளிக்கச்செய்வது நடிக, நடிகைகள்தான்.

**நடிகன்:**—மேல் நாட்டில் ஒரு நடிகனை ஒப்பந்தம் செய்யுமுன் அவனிடம் தான் நடிக்கப்போகும் கதையைக் கொடுத்துவிடுவார்கள். அதை அந்நடிகன் பூராவும் வாசித்தானதும், தான் நடிக்கவேண்டிய பாகத்தைப்பற்றி நன்றாக சிந்தித்து அப்பாகத்தைத் தாங்கி தான்சரிவர நடிக்கமுடியும் என்று திடமாக அந்நடிகனின் மனதில் பட்டாலன்றி அக்கதையில் நடிக்க ஒப்புக் கொள்ளமாட்டான். நடிப்புக் கலையை நன்றாக உணர்ந்த நடிகன்தான் அவ்வாறு சிந்திப்பான் ஆனால் நம் நாட்டு தவநடிகர்களோ கதையின் போக்கையாவது சற்று தெறிந்துக்கொண்டால் போதாதா? அவர்

களுக்கு வேண்டியது ஐம்பதாயிரம், அறுபதாயிரம் என்ற பணத்தொகைதானே. அட்வான்ஸ் பெற்றுக்கொண்டான தும் அந்நடிகரிடம் கொடுக்கப்படும் அவர் நடிக்கவேண்டிய பாகத்தை இரண்டு நாளில் மனப்பாடம் செய்துவிட்டு ஒத் திகைக்குத் தயராகிவிடுவார். அவர் மனதில் தோன்றுவது, "பே—இது ஒரு பிரமாதமா எனக்கு, ஒரே காலத்தில் நான்கு ஐந்து ஸ்டுடியோக்களில் சேர்ந்தாற்போல் ஷுட் டிங் வைத்துக்கொண்டால்கூட சலிக்காமல் நடித்துவரும் எனக்கா இது ஒரு பெரிய காரியம்" என்பதுதான்.

நம் நாட்டின் நடிகரை அவரின் லக்ஷணங்களைக் கொண்டே இவர் ஒரு நடிகரென்று சொல்லிவிடலாம். கிருதாவெட்டு கிராப்புடனும், சில்க் ஜிப்பாவுடனும், சரி கை விசிறிமடிப்பு குட்டையுடனும், கழுத்திலொரு தங்க சங்கலியும், நெற்றியில் ஜவ்வாது பொட்டுடனும் கூடிய ஒரு ஆள் மோட்டார் ஒன்றில் செல்லுகிருரென்ருல் அந்த ஆசாமியை இவர் ஒரு சினிமா நக்ஷத்திரம் (நடிகன்) என்று கூசாமல் சொல்லிவிடலாம். ஒரு நடிகனுக்கு வேண்டிய முகவெட்டோ, ஆள்பார்வையோ, அல்லது யோக்கியதாம்சமோ அந்நடிகனிடம் எதிர்பார்ப்பது குதி ரைக்கொம்புதான்; ஏதோ ஒரு நடிகனிடம் சில அம்சங்கள் இருப்பினும் அவனைத்தான் சரியான முறையில் பயன் படுத்தமாட்டார்களே நம் படமுதலாளிகள்.

நிற்க, நடிகன் முதலில் தெறிந்துக் கொள்ளவேண்டி யது என்ன? தான் ஏற்கும் பாகத்தை சரிவர உணர்ந்துக் கொண்டு அப்பாகத்தை உணர்ச்சியோடு நடித்தல். நடிப் பதை தத்ரூபமாக நடித்துக்காட்டுதல், கூடுமானவரையில் மிதமிஞ்சி நடிப்பதைவிட்டு மிதமாக நடித்தல், பேசும் வசனங்களைச் சரியாக உச்சரித்துத் தெளிவாகப் பேசுதல். கதையின் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முகபாவனைகளை மாற்றி இயற்கையாக நடித்தல். இவ்விதிகளை யநுசரித்து நடிக்கும் நடிகர் ஒருவராவது நம் நாட்டில் இருக்கிருரா என்றுகூட சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. ஒரு படத்தில் திடீர்வசத்தால் கொஞ்சம் உணர்ச்சியோடு நடித்து நடிப்பின் உச்சியை அடைந்துவிட்டார் என்று ஜனங் களுக்குப்பட்டுவிட்டு நாலு பத்திரிகைகளிலும் புகழுரை வெளிவந்துவிட்டால், அடுத்தப் படத்தில், நடிப்பின்

உச்சியிலிருந்த அந்த நடிகர் இடறிவிழுந்து நடிப்பின் பாதாளத்தைத்தான் அடைந்துவிடுவார். இப்படியிருக்கிறது நம் நடிகர்களின் குணதிசயம். இதுமட்டுமா, ஒரு படத்தில் புகழ்மாலை யடைந்துவிட்டார் என்றால் அடுத் தப்படத்தில் அவர் காக்ஷியளிப்பது தஞ்சாவூர் உருட்டு பொம்மை போல்தான். பாவம், அவர் என்ன செய்வார், அவர் கழுத்தில் விழுந்த வெற்றிமாலை அவரை விண்ணுலகிற்கு அழைத்துச்சென்றதையும், சிறிது காலத்திற்கு முன் அழைப்பார் யாரும் இல்லாதவராய் கிடந்தவருக்கு இப்போது, ஆள்மீது ஆளாகவும், கார்மேல் காராகவும் வந்து அழைக்கும் அழைப்பையும் நினைத்துநினைத்துப் பூரிக்கும்போது அவர் உள்ளம் மட்டுமென்ன உடலே பூரித்துப் போக வேண்டியதுதானே! இப்படி பருமனாகிவிட்டாரே, இனி சினிமாவிற்கே அருகதையற்றவராகிவிட்டாரேஎன்று அவரைக்கொண்டு படம் தயாரிக்காமல் இருக்கிறார்களா என்ன நம் படமுதலாளிகள்! கிராக்கிமேல் கிராக்கி வரவேதான் நடிகர்பாடும் கிராக்கியாகி பணத்தொகையையும் அதிகரித்துக்கொண்டே போகிறாரே. நம் நாட்டு நடிகர்கள் தான் புகழ்பெற்றுவிட்டால் தொந்தியும் வயிறுமாக மாறிவிடுகிறார்கள். மேல்நாட்டு நடிகர்கள் பல்கலைக் கழக (அக்கெடமிக் அவார்ட்) பரிசுபெற்றாலுங்கூட எப்போதும் போலவே இயற்கை சரீரத்துடனே காக்ஷியளிக்கிறார்களே. அவர்கள் அடையாத பேரானந்தமும், புகழுமா நம் தமிழ் நடிகர்கள் அடைந்துவிடுகிறார்கள் ?

நம் நடிகர்களில் பெரும்பாலோர் நடிப்பை விலைகொடுத்து வாங்குவதுப்போல் நடிக்கிறார்கள். சிலர் 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை', என்பதுபோல் தாம் கை நீட்டிப் பெற்றுக்கொண்ட பணத்திற்காகவும் கடமைக்காகவும் டைரக்டர் சொல்லிக்கொடுப்பதை அப்படியே குருட்டுப் பாடமாக நடித்துவிடுகின்றனர். தாம் ஏற்கும் பாகத்தைச் சரிவர உணர்ந்து அப்பாகத்தை உணர்ச்சியோடு நடித்துக்காட்டும் நடிகர்கள் நம் நாட்டில் ஓரிருவர்கூட இருக்கிறார்களா என்பதும் சந்தேகம்தான் !

உதாரணமாக ஒரு நடிகர் காதல் கட்டத்தில் நடிக்கிறாரென்று வைத்துக்கொள்ளுவோம். காதலன், காதலியை அணுகி தன் கருத்தைத் தெறிவிக்கிறான்; அவள் பால்

கொண்ட காதல் எத்தகையதென்பதை அந்நடிகனின் முக பாவனையிலிருந்தோ அல்லது அவர் பேசும் பாணியிலிருந்தோ அல்லது அவர்நடிக்கும் நடிப்பிலிருந்தோ நாம் அறிந்துக் கொள்ள இயலுவதில்லை. ஆனால் அவர் பேசும் வசனத்திலடங்கிய பொருளைக் (காதல் வர்ணனை) கொண்டுதான் இந்நடிகர் காதல் கட்டத்தில் நடிக்கின்றார் என்று யூகிக்கலாம். கண்ணே, மூக்கேயென்று சில காதல்சம்பாஷனைகளை, மதுவுண்டவர்களின் வாயிலிருந்துவரும் சொற்களைப்போல, நா குழறிக்கொண்டே பெருமூச்செரிய பேசுவதுதான் நடிப்பென்று நம் நடிகர்கள் கருதினால் நடிப்புக் கலை எவ்வாறு உச்ச நிலையை யடையமுடியும்? நம் நாட்டு சினிமா கலைதான் சிறந்துவிளங்குமா? என்று சிந்தியுங்கள். "லேடி ஹேமில்டன்" (Lady Hamilton) என்ற மேல் நாட்டுப் படத்தில், நெல்சனாக (Nelson) நடிக்கும் "லாரன்ஸ் ஹாலிவர்" (Lowrence Holywer) என்ற நடிகர் தம் பாகத்தை எவ்வாறு உணர்ச்சித் ததும்ப நடித்திருக்கிறாரென் பதைப் பாருங்கள். ஒரு கண் பொட்டையான நெல்சனாக நடிக்கும் லாரன்ஸ் ஹாலிவர் காதல் கட்டத்தில் நடிக்கும்போது காதல் உணர்ச்சியை மற்றொரு ஒத்தைக் கண் மூலமாக எவ்வாறு தெறிவிக்கிறாரென்பதை சிந்திக்கும்போது அந்நடிகர் தன் பாகத்தை எத்தனை உணர்ச்சியுடன் நடிக்கிறாரென்பது விளங்கும். இப்படிப்பட்ட நடிகர்களெல்லாம் 'சினிமா நக்ஷத்திரங்களென்றும்', தவ நடிகர்கள் என்றும் பட்டப்பெயர் வாங்காதது ஆச்சர்யமன்றோ? நம் நாட்டில் ஒரு நடிகன், சினிமா நக்ஷத்திரமென்றோ அல்லது தவ நடிகன் என்றோ பட்டப் பெயர்களைப் பெற்றுவருவது சர்வ சாதாரணமாய் ஆகிவிட்டது. பட்டங்களை யடைவதுபோல் நடிப்பிலும் உச்சநிலையை அடைந்தால்தானே அவர்களுக்கும் பெருமை, அவர்கள் பெற்ற பட்டங்களுக்கும் உயர்வு, நம் தமிழ் நாட்டிற்கும் சிறப்பு? 'நடிகர்களாகப் பார்த்து பட்டங்களை வைத்துக் கொள்வதில்லையே படமுதலாளிகள்தானே தங்களுடைய வசூலைக் கருதி அத்தகையப் பட்டப்பெயர்களை யளிக்கிறார்கள், பாவம் நடிகர்கள் என்னசெய்வார்கள்' என்று சிலர் கருதுவார்களாயின், படமுதலாளிகளே பார்த்து பட்டங்களை யளித்தாலுங்கூட திடீர்வசமாக அளிக்கப்பட்ட அந்த பட்டப் பெயருக்குத் தகுந்தாற்போல் நடிப்பை

உணர்ந்து நடித்து அந்த பட்டபெயருக்கு ஏன் மதிப்பளிக்கக்கூடாது?

தவிர ஒரே நடிகன் ஏககாலத்தில் சேர்ந்தாற்போல் நான்கைந்துப் படங்களில் நடிக்க ஒப்பந்தஞ்செய்யப்பட்டு ஆற்றிலொருகாலும், சேற்றிலொருகாலுமாக வைத்துக்கொண்டு கடைசியில் ஒரு படத்திலும் வெற்றியடையாமல் போவது நம் நாட்டில் இயற்கையாகிவிட்டது. இங்ஙனம் நம் நடிகர்கள் நான்கைந்துப் படங்களில் சேர்ந்தாற்போல் நடிக்க ஒப்பந்தம் செய்யப்படுவதின் நோக்கம் அவர்கள் மிகப் பெரிதாகக் கருதும் பணம்தான் என்பதில் ஐயமில்லை. பணத்திற்காக தங்கள் பெயரை, புகழை, கலையை அழித்துக்கொள்ளுகிறார்கள் என்பதை அவர்கள் உணர்ந்தால் தானே!

ஒரு நடிகன், தான் ஒப்பந்தம் செய்துக்கொள்ளப் படுவதற்குமுன் தனக்கு அளிக்கவிருக்கும் பாகம் தனக்குத் தகுதியானதா; அப்பாகத்தையேற்று தன்னால் சரிவர நடிக்கமுடியுமா; என்பதை அறிந்துக்கொள்வது ஒரு நடிகனின் முதற்கடமையாகக் கொள்ளவேண்டும். அப்படி அறிந்துக்கொள்ள வேண்டுமானால் தான் ஒப்பந்தம் செய்யப்பட்டு நடிக்கப்போகும் கதையை முதலாளியிடமிருந்து பெற்று அதை நன்றாக வாசித்து அக்கதையின் சாராம்சத்தை அறிந்துக்கொண்டு, தனக்களிக்கப்போகும் பாத்திரத்தைக் கதாசிரியர் கதையில் வர்ணித்துள்ளதை அப்படியே தன் மனதிற்குக் கொண்டுவந்து நடிப்பைப்பற்றி சற்று சிந்தனை செய்யவேண்டும். இப்படி கதையை வாசித்து அக்கதையில் தான் நடிக்கப்போகும் விதத்தைப் பற்றியும் சிந்தனைசெய்யுங்காலத்து, அக்கதையில் நடிக்க தான் தகுதியானவன்தான் என்றோ அல்லது தன்னால் நடிக்கமுடியாது என்றோ அந்நடிகனின் மனதில் நிச்சயமாக ஒரு முடிவு தோன்றும். அந்த முடிவு தோன்றினாலன்றி அப்படத்தில் நடிக்க ஒப்புக்கொள்ளக்கூடாது. அந்த கொள்கையையுடையவன்தான் ஒரு நடிகன் என்று சொல்லிக் கொள்ளலாம். கலைஞனென்றும் கூறலாம். அத்தகைய மனப்பான்மையுடைய ஒரு நடிகன் நம் நாட்டில் இருந்தால்தான் நாம் பாக்கியஞ்செய்தவர்களாக ஆகிவிடுவோமே! இவ்

வளவு சீக்கிரத்திலா அத்தகைய அதிர்ஷ்டம் வந்துவிடப் போகிறது நம் நாட்டிற்கு !

மேற்கூறிய முறையை அநுசரித்து ஒரு நடிகன் நடிப்பானேயாகில் அப்படம் எப்படி வெற்றியடையாமல் இருக்கமுடியும்? நடிகர்கள் தாங்கள் நடிக்கப்போகும் கதையை நன்ருக வாசிப்பதால் தாங்கள் ஏற்கும் பாத்திரத்தின் போக்கை சரிவர உணர்கிருர்கள். அப்படி தங்கள் பாத்திரத்தை உணர்வதால் இயற்கையாக நடிக்கும் விதத்தை சுலபமாக தெரிந்துக்கொள்ளுகிருர்கள். டைரக்டரின் ஆர்பாட்டங்களுக்கும் அடிமையாக வேண்டியதில்லையே. இது ஒரு சிறந்த முறையல்லவா? மேல் நாட்டினர் கையாளும் முறையை நாமும் தான் சற்று கையாளுவோமே! இதனுல் பணம் காசா செலவாகப் போகிறது? முக்கியமாக, கதையின் போக்கை சரிவர உணர்ந்த நடிகன் டைரக்டரின் தயவைக்கூட எதிர்பார்க்க வேண்டியதில்லை. மேலும் நம் தமிழ் படத்தை டைரக்டு செய்பவர்தான் வடநாட்டார், அல்லது ஆங்கிலேயராயிற்றே! தமிழராய் இருந்தால்தானே கதையின் போக்கை தானும் படித்துணர்ந்து நடிகர்களுக்கும், 'அப்படி நடிக்கவேண்டும், இப்படி நடிக்கவேண்டும்' என்று போதிக்க முடியும். பாவம் அவருக்கே கதையை ஹிந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ படித்துசொல்லுகிருர்களே! தானே கதையின் போக்கை சரிவர உணர்ந்துக் கொள்ளக்கூடாத டைரக்டர் நடிகர்களுக்கு எங்கே அக்கதையின் போக்கை போதிக்கமுடியும்? முதலாளிகள்தான் பிறபாஷையினரைவைத்துப் படமெடுக்க முனைந்தாலும் அப்படத்தில் நடிக்கும் கதா பாத்திரந்தாங்கும் பெரியநடிகர்கள் அதில் நடிக்க சாதகமாகாது என்று கூறிவிடுவதுதான் உசிதம். ஏன், அந்த பிறபாஷையினர் டைரக்டுசெய்யும் அளவிற்கு நம்மவர்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? அவர்களிடம் உள்ள திறமை நம்மவர்களிடம் இல்லாமலா போய்விட்டது?

தமிழ் நாடு தழைக்க, தமிழ் நாட்டின் சினிமா கலை வளர, ஒவ்வொரு நடிகரும் பாடுபடவேண்டும். வெறும் பேச்சால் அல்ல, செய்கையால். நடிப்பின் உச்சநிலையை அடையவேண்டும், மிதமிஞ்சிய நடிப்பால் அல்ல, மிதமான நடிப்பினுல், சினிமா கலைக்கு சேவைச்செய்ய முயலவேண்

டும், சினிமா ராணிகளுக்கல்ல! தமிழ் நாட்டின் சினிமா கலைக்கு இனியாவது நம் நடிகர்கள் மேற்சொன்ன விதிகளை யநுசரித்து தமிழ் நாட்டின் சினிமா கலையை வளர விதை விதைக்க முயலுவார்களா?

**நடிகை:**—நடிகர்களைப்பற்றி கூறியுள்ளதைவிட நடிகைகளைப்பற்றி அதிகம்கூற தேவையில்லைதான். இருந்தாலும் நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் ஒருசிலவற்றில் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. நம் படமுதலாளிகளும், டைரக்டர்களும் காட்டிவரும் அதிகப்படியான சலுகை நடிகர்களுக்கல்லவென்பது யாவரும் அறிந்ததே. அவர்கள் பிரமாதமாகக் கருதுவது நடிகைகள்தான். 'நடிகைகளுக்குத்தான் அதிக சலுகைக் காட்டப்பட்டுவருகிறது' என்பதை நம் நடிகர்களே கட்டுரைகளின் வாயிலாக எடுததெழுதிவருகிருர்கள் இதிலிருந்தே நடிகர்களைக் காட்டிலும் நடிகைகள் ஒருபடி உயர்ந்தவர்களே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. சில சமயங்களில் நடிகர்கள் தாங்களும் ஏன் பெண்களாகப் பிறந்திருக்கக்கூடாது என்று எண்ணியதுமுண்டு! எண்ணியும் வருகிருர்கள்! நடிகைகளுக்குத்தான் என்ன அதிர்ஷ்டம்! நக்ஷத்திரப் பலனே என்னமோ. ஆம், அவர்களே நக்ஷத்திரம்தானே! இங்ஙனம், நடிகைகளுக்குக் காட்டப்படும் அமோகமான சலுகை தான் அவர்களை நடிகைகள் என்பதைக்கூட மறக்கச்செய்து சினிமா கலை வளர்ப்பிற்கே முட்டுக்கட்டையாகிவிடுகிருர்கள். அந்தோ! இவர்களும் நடிகைகளா?

**நானும் ஒரு நடிகை:**—நம் நாட்டில் ஒரு நடிகையாக மாறவேண்டுமென்ருல்தான் வெகு சுலபமாயிற்றே! பார்வைக்குச் சற்று வசீகரமாகவும், கொஞ்சம் இனிய சாரீரம் இருந்து 'எனக்கும் நாட்டியம் வரும்' என்ற வகையில் நாட்டியமும்கூடிய ஒரு நங்கை படமுதலாளியொருவரின் அன்பிற்குப் பாத்திரமாகிவிடுவாளாயின் அந்நங்கைதான் ஒரு சினிமா நடிகை, சினிமா நக்ஷத்திரம். நடிப்பு என்ற பதத்திற்கே அந்தம்மாளின் அகராதியில் அர்த்தம் காண முடியாதென்ருல் அவர் எப்படி நடிப்பதைப்பற்றி அறிந்துக்கொள்ளமுடியும்? என்னமோ 'நாமும் நடிகை, வசனத்தைப் படித்து மனப்பாடம் செய்துவிடவேண்டியது;

அதை யப்படியே காமிராமுன் தோன்றி ஒப்புவித்துவிடுவது' என்பதுதான் அந்நடிகையின் கருத்து. வசனம் பேசும்போது அர்த்தமற்றமுறையில் அடிக்கடி தலையைப் பலவித கோணல்களாக ஆட்டிப் பேசுவதும், கண்களைச் சுழட்டி, சுழட்டி கர்ணம் போடச்செய்வதும், வசனத்தை மழலைச்சொற்களால் பேசுவதும், மான்குட்டியை மனதில் நினைத்துக்கொண்டு மதயானையைப்போல் அங்குமிங்குமாகத் துள்ளி ஒடுவதுமதான் நடிப்பு என்று எண்ணுகிறார்கள்போலும் நம் சினிமா ராணிகள்! நடிப்பை முக பாவனைகளில் காட்டமுடியாது, ஓடி, ஆடினுல்தான் நடிப்பு வரும் என்று இவர்கள் கருதினுல் அதற்கு நாமென்ன செய்யமுடியும். ஒரு நடிகை தான் ஏற்கும் பாகத்தை சற்று உணர்ந்து கவனிப்பாராஞல் தான் நடிக்கும்போதும் உணர்ச்சியோடு தத்ரூபமாக நடிக்க ஏதுவாயிருக்கும். இயற்கை நடிப்பும் தாஞக உதிக்கும். ஆஞல் தற்சமயம் இயற்கை நடிப்புடன் நடிக்கும் நடிகை நம் தமிழ் நாட்டு சினிமா உலகில் ஒருவராவது இருப்பதாக நான் நினைக்கவில்லை. 'நடிப்பாவது, கலையாவது, நமக்கு வேண்டியது பணந்தானே' என்று கருதுவர் சில நடிகைகள். 'நடிப்பினுல்தான் படத்தில் புகழைப் பெறமுடியுமா, இருக்கவே இருக்கிறது நம்முடைய இனிய சாரீரம், அதைப் பயன் படுத்திவிட்டால்போகிறது; புகழுக்குமேல் புகழ் குவிந்து விடாதா' என்று நடிப்பைப் புறக்கணிப்பவர்களும் நடிகைகள் என்றுதானே சொல்லிக்கொள்ளுகிருர்கள்! நாமும் ஆமாம்சாமி போடுகிரும். இத்தகைய சங்கீத வாணிகள் ஏன்தான் சினிமாவில் தோன்றி சினிமா கலை அபிவிருத்திக்கு தடையாக நிற்கின்றனரோ! சங்கீத வாணிகள் சங்கீத கச்சேரி முனையில்தோன்றி வெற்றியடையட்டுமே; சினிமா ராணியாவதற்கு ஏன் முயலவேண்டும்? அப்படி நடிக்க விரும்பும் ராணிகள் பட முழுதிலுமே சங்கீத மாரியைப் பொழியாமல் 'சினிமாவில் நடிக்கிரும்' என்பதை நினைவில் வைத்துக்கொண்டு கானவருஷத்தைக் கொஞ்சம் நிறுத்திக்கொண்டு கூடுமான வரையில் இயற்கையாக நடித்து நடிகை என்ற பெயரை நிலைநாட்ட ஏன் முயற்சிக்கக்கூடாது? நிற்க சிலர் தாங்கள் கற்றிருக்கும் அரை குறை நாட்டியத்தை அப்படியே படத்தில் ஆடி அதன்மூலம் நாட்டிய ராணி என்ற பட்டப்பெயரைப் பெற முயற்சித்து

வருகிறார்கள். அவர்களும் நடிகைகளாகத்தானே திகழ்ந்து வருகிறார்கள். படத்தில் நாட்டியமே இருக்கக்கூடாது என்று கூறத்துணியவில்லை. அதிகப்படியான நாட்டியத்தைப் பயன்படுத்திக் கொள்வதால் படத்தில் நடிக்கிறோம் என்பதை அகற்றிவிடுகிறது. இங்ஙனம் ஒவ்வொரு நடிகைகளும் ஒவ்வொருவகையில் தங்கள் நலத்திற்காகவே சினிமா உலகில் தோன்றி நடிகைகளாக இருந்துவருகிறார்களே தவிர ஒரு நடிகையாவது தன்னலமற்று சினிமா கலைக்குத் தொண்டாற்றும் நோக்கத்துடன் சினிமா உலகில் பிரவேசிக்கவில்லை என்று திடமாகக்கூறலாம். ஏழெட்டுப் படங்களில் நடித்து கியாதிப்பெற்று அதன் வாயிலாக லக்ஷக் கணக்கில் பணத்தை சேகரித்துவிட்டால் ஒரு படக் கம்பெனியோ அல்லது ஒரு சினிமா கொட்டகையோ தன் பேரில் சொந்தமாக நடத்த திட்டம் போடத்தான்தெரியும் நம் நடிகைகளுக்கு. ஆனால் கலையை வளர்க்கக்கூடிய திட்டம் வகுக்க அவர்கள் முற்படுவதில்லை. போகட்டும் அதைப்பற்றி சிந்தித்தாலே போதுமே! வட நாடு, மேல் நாடுகளைப்போல் நம் தமிழ் நாடும் சினிமா துறையில் முன்னணியில் நிற்க வேண்டுமென்று ஒரு நடிகையும் இன்று கனவில்கூட கருதமாட்டார். இது நம் சினிமா நக்ஷத்திரங்களின் பிற்போக்கான மனப்பான்மை. ஆனால் மேல் நாட்டில், மாதத்திற்கு இருபதினாயிரம் டாலர், முப்பதினாயிரம் டாலர் என்று டாலர் கணக்கில் ஊதியம பெறும் நடிகைகளில் ஒருவராவது படக் கம்பெனியைத் தன்பேரில் நடத்தவோ, அல்லது சினிமா கொட்டகைக்குச் சொந்தக்காரியாக ஆகிவிடவோ கருத்திலும் நினைப்பதில்லையே! இது ஆச்சர்யமன்றோ! ஒவ்வொரு நடிகையும் தங்கள் வாழ்க்கையை, ஏன் உடலைக்கூட சினிமா கலைக்காக அற்பணம்செய்து வருகிறார்களென்றால் இது அவர்களின் முற்போக்கான மனப்பான்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறதல்லவா?

முதலாவது ஒரு மேல் நாட்டு நடிகை தனக்குத் தகுதியுள்ள, தன்னால் நடிக்கக்கூடிய பாகத்தைத் தான் ஏற்று நடிக்க ஒப்புக்கொள்வாள். தனக்களிக்கவிருக்கும் பாகத்தைத் தன்னால் நடிக்க சாத்தியப்படாது என்று, அறிவாளாயின், அப்படத்தில் நடிக்கச் சிறிதும் சம்மதியாள். அதனால்

எத்தனை லக்ஷம் டாலர் கிட்டுவனவாயினும் அதைப் புறக் கணிப்பாள். அவளுக்குப் பணம் பெரிதல்ல. கலை தான் பெரிது. அந்தோ, நம் நடிகைகளுக்கா சொல்லவேண்டும்; எந்தக் கதையானாலும்சரி, எந்த பாகமானாலும்சரி, அதைத் தயங்காமல் ஏற்று நடிக்க ஒப்புக்கொள்வார். என்ன தாராளமான குணம் நம் நடிகைகளுக்கு! ஆம், தாராளம் தான்; பணத்திற்காக எதுவானாலும் செய்யத் துணிவார்கள் வெகுதாராளமாக! பார்க்கக்கூட சகிக்காத ஆபாசங்களையேற்று நடிக்க ஒப்புக்கொள்ளும் இவர்கள், பொருத்தமற்ற பாகத்தை ஏற்கத்தானா தயங்கப் போகிறார்கள்?

**பணமா? கலையா?** :—இவர்களைப் போன்றவர்களல்ல மேல் நாட்டு நடிகைகள். உதாரணமாக, மேல் நாட்டு நடிகைகளில் மிகச்சிறந்தவராகக் கருதப்படும் கிரேட்டா கார்போ (Greta Garbo) என்ற நடிகை "க்வீன் கிரிஸ்தியானா" (Queen Christina) என்ற படத்தில், தனக்களிக்கப்பட்ட கதாநாயகியின் பாகத்தையேற்குமுன் ஒரு நிபந்தனைக் கூறினாளாம். அதாவது, கிருஸ்தியானா ராணியாரின் குணாதிசயங்களை தான் சரிவர அறிந்துகொண்டாலொழிய அப்படத்தில் நடிக்க முடியாது என்று கூறிவிட்டாளாம். அதற்காக அப்படத்தின் முதலாளியும், டைரக்டரும் வெகு சிரமப்பட்டு, உலகத்தின் முக்கிய பாகங்களிலுள்ள புத்தக சாலைகளிலிருந்து கிருஸ்தியானா ராணியாரின் வாழ்க்கை வரலாறுகளடங்கிய புத்தகங்களை வரவழைத்து அந்த நடிகையிடம் ஒப்படைத்தார்களாம். அப்புத்தகங்கள் எல்லாவற்றையும் வாசித்து அதிலுள்ள கிருஸ்தியானா ராணியாரின் குணாதிசயங்களைச் சரிவர ஆராய்ந்துப் பார்த்தப் பிறகுதான் அப்படத்தில் நடிப்பதாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டாளாம். எப்படி அந்நடிகையின் மனப்பான்மை? அந்நடிகையின் லக்ஷியம்தான் என்ன? பணமா? கலையா?

தவிர, தனிப்பட்ட ஒரு சில நடிகர்களுடன் தான் நடிக்கமுடியும் என்ற பிற்போக்குடையவர்களாக இருக்கிறார்கள் வகுப்புப் பிரிவினையைக் கடைப்பிடிக்கும் சில உயர் வகுப்பைச் (ஜாதி) சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் சினிமா ராணிகள். இங்ஙனம் வகுப்புப் பிரி

வினையைக் கடைப்பிடிக்கும் நடிகைகள் சினிமா கலைக்குப் பாடுபடுகிறார்கள் என்றால் எப்படி பொருந்தும்? ஆண்டவன் சந்நதியில் அனைவரும் சமம் என்று கூவும் இந்த சகாப்தத்திலா உயர்வு, தாழ்வு என்ற வகுப்புப் பிரிவினை? அப்படி வகுப்புப் பிரிவினையைக் கருதி பிற இனத்தாரோடு நடிக்கப்பிரியப்படாத அந்நடிகைகள் சினிமா உலகை விட்டே அகன்றுவிடலாமே!

நடிப்பின் சிகரமென்று கருதப்படும் மேல் நாட்டு நடிகைகளெல்லாம் இனவேற்றுமையின்றி எல்லா நடிகர்களுடன்சேர்ந்து நடிக்கின்றனரென்றால் நடிப்பு என்ற பதத்திற்கே அர்த்தம் தெறியாத நம் நடிகைகள், 'அவருடன்தான் நடிக்கமுடியும், இவருடன் நடிக்கமுடியாது' என்றெல்லாம் சபதம் செய்வது சரியா? கலைக்குத் தான் தொண்டாற்றமுடியுமா என்று சிந்தித்துப்பாருங்கள்.

குடும்பப் பெண்கள் சினிமாவில் சேரலாமா என்று சிலர் கேட்க்கலாம். சினிமா கலையில் ஆர்வமும் சினிமா கலையை அபிவிருத்திசெய்யும் நோக்கமும், திடமான உட்கருத்தும், கொண்ட எந்தக் குடும்பப் பெண்ணும் சினிமாவில் சேர்ந்து சினிமா கலைக்குத் தொண்டாற்றலாம். பெண்களுக்கே ஆபரணமான கற்பைமட்டும் பாதுகார்த்துக்கொண்டு மற்றெதையும் செய்யலாம். ஆனால், சினிமாவில் சேருமுன் "நாம் சினிமாவில் சேர்ந்தால், கலைக்கே பாடுப்படவேண்டும், பாபகரமான எதையும் செய்ய கற்றுக்கொள்ளக்கூடாது, செய்யவும்கூடாது, அநாவசியமாக எந்த ஆடவரிடமும் பேசக்கூடாது, பேச்சிக்குமுன் சிறிக்கிறார்களே அதைப்போல நடந்துக்கொள்ளவும்கூடாது. இன்னும் இப்படி நடந்துக்கொள்ளவேண்டும், அப்படி நடந்துக்கொள்ளக்கூடாது" என்றெல்லாம் நிர்மாண திட்டங்களைப் போட்டுக்கொண்டு சினிமாவில் சேரும் பெண்களில் நூற்றுக்கு ஒருவராவது இன்று வெற்றிப் பெற்றிருக்க மாட்டார்கள். சினிமாவில் சேர்ந்த ஒரு மாத காலத்திலேயே அவர்களின் நடையுடை பாவனைகளனைத்தும் மாறிவிடுவதைக் காணலாம். அவர்கள் போட்ட நிர்மாண திட்டங்களெல்லாம் காற்றிலடிக்கப்பட்டுவிடும். எந்த ஆடவரிடமும் அநாவசியமாகப் பேசக்கூடாது என்று திட்டம் வகுத்த அவர்கள் இப்போதெல்லாம் சதா ஆடவருடனே ஆனந்தத்தாண்டவமாடிக் கொண்டிருப்பார்கள்.

'யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே' என்பது போல் அவர்கள் வாயிலிருந்து ஒரு சொல் வருவதற்குமுன், 'களுக்' கென்ற சிரிப்புதான் வரும். எதிலுமே சம்மந்தப் படாத ஒரு விஷயத்தை அறிந்துக்கொள்ள ஆடவரை நோக்கிச் செல்லுவார்கள். ஆடவருடன் சரச வார்த்தை யாடுவதில்தான் அதிகப் பிரியங்கொள்வார்கள். ஐந்தாறு மாதங்கள் சினிமா கலைக்குத் தொண்டாற்றுவதற்குள், கற்பு என்ற அழகிய மலரை காமமென்ற கொடும் அரக்க னுக்குப் பலியாக்கிவிடுவார்கள். அரக்கனிடம் அகப்பட்ட மலர் அதோகதியாகாமல் அழகாக விளங்கமுடியுமா? இங் ஙனம் கற்பழிக்கப்பட்டு, கண்டகண்ட துண்டு ஆசாமி களுடன் ஆபாச வார்த்தைகளை அல்லும் பகலும் உறை யாடிக்கொண்டு, கலைக்கு உறைவிடமாகிய காரியாலயத்தை கற்பாதானத்துக்கு உறைவிடமாக்கி வருகிறார்கள். இதுவா கலை? இப்படியா மற்ற நாடுகளில் நடக்கிறது? கற்புக்கே முதல் ஸ்தானம்பெற்ற நம் தமிழ்நாட்டிலா இவ்வித அநீதி நடப்பது? கண்ணகி அவதரித்தத் திருநாட்டிலா கற்புக்கு பங்கம் நேருவது? தாய் எட்டடியென்றால் குட்டி பதினாறு அடி யென்பதுபோல படமுதலாளிகளும், டைரக்டர்களு மே கற்பழிவுக்குச் சாதகமாக இருக்கும்போது சில்லரை நடிக நடிகைகள் எவ்வாறு இருப்பார்கள்? அற்ப சுகத்திற் காக ஆசைப்படும் ஒரு நடிகையின் வாழ்க்கை எவ்வளவு தூரம் நாசமாகிறது என்று கவனித்துப்பாருங்கள். இயற் கையாக அவர்கள் முகத்தில் தவழும் வண்ண ஜாலங்கள் மறைந்துப் போய்விடுகிறது. கண்ணாடிப் போன்றிருந்த கன்னங்கள் குழிவிழுந்துப்போகிறது. ஒளிவிட்டுப் பிரகா சித்திருந்த கமலக் கண்கள் ஒளிமங்கி ஊனமாகிறது. அன்று எல்லோரையும் எளிதில் வசீகரித்த மோகன உரு வம் இன்று காணவும் சகிக்காதவாறு செய்கிறது. இதற் கெல்லாம் காரணம் யார்? அழகு என்ற அணிகலமா? ஆசையென்ற அறிவீனமா? அல்லது கண் மறைக்கும் காமமா?

"கலை பீடமாக விளங்கவேண்டிய சினிமாவைத்தான் இன்று காம பீடமென்றும், விபசாரவிடுதி" யென்றும் கூறுகிறார்கள் நம்மவர்களில் சிலர். 'சினிமா வந்த விளைவு தான் இன்று நம் நாட்டில் விபசாரம் தலை விரித்தாடு கிறது' என்கிறார்கள் மற்றொரு சிலர். இம்மாதிரியே சினி

மாவின் நிலைமை சீர்கெட்டுப் போய்க்கொண்டேயிருக்குமாயின் நாளடைவில் நம் நாட்டின் கௌரவம், உயர்வு எல்லாம் சீரழிந்துப் போய்விடும்' என்று பயப்படுகிறுர்கள் இன்னும் சிலர்.

இந்நிலையில் நாம் செய்யக்கூடியதென்ன? மேல் நாட்டில் சினிமா கலை முன்னேறிக்கொண்டே வருகிறது. நம் நாட்டில் பின் வாங்கிக்கொண்டே போகிறது. அன்று மேல் நாட்டினரைப்பார்த்து சினிமா துறையில் இறங்கினோம். நம்மைப்போல் நம் வடநாட்டாரும் (வடஇந்தியர்) தானே சினிமா துறையில் இறங்கினுர்கள்? அவர்கள் எவ்வளவு தூரம் சினிமா துறையில் முன்னணியில் நிற்கிறுர்கள் என்பதை, ஹிந்தியே புரிந்துக்கொள்ள முடியாத நம் தமிழரால் அமோகமான வரவேற்பும், வெற்றியுமடையும் அவர்களின் படத்தைக்கொண்டே நிர்ணயித்துவிடலாமல்லவா? போனதுபோகட்டும். இனியாவது 'சினிமா, ஒரு கலையாயிற்றே இதை நாம் வளர்க்கவேண்டும், மற்ற நாடுகளைப்போல் நாமும் பெயரையும் புகழையும் அடைய வேண்டும் (பணத்தாலல்ல). சங்கீதம், நடனம், நாடகம், சிற்பம் போன்ற இன்னும் மற்ற கலைகள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும், நம் தமிழ்த் திருநாடு சினிமா கலையிலும் சிறந்துவிளங்கவேண்டும், உலகமே கண்டு வியக்கத்தக்க தமிழ் படங்களை இனி தயாரிக்கவேண்டும், சினிமா கலைக்கே ஏன் சினிமா உலகத்திற்கே முதன்மை ஸ்தானம் நம் தமிழ் நாடுதான்' என்ற நூதனப் பெயரை அடைய முயற்சிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இன்றுமுதல் சினிமா கலைஞர்கள் சினிமா கலைக்குப்பாடுபடட்டும். அப்போதுதான் சினிமா கலை நம் நாட்டில் தலைசிறந்து விளங்கும், மற்ற நாட்டினர்களுடன் நாமும் ஒருவராகக் கருதப்படலாம். தமிழ் நாட்டிற்கும் சிறப்பு, பாரதியார் பாடிச்சென்ற பாட்டுக்கும் மதிப்பு.

**நான் விரும்புவது:**—இன்று சினிமா இருக்கும் நிலையில் பணத்தையும், மற்ற சிற்றின்ப ஆசையையும் மனதில் கருதி சினிமா கலையை முழுக்கக் குட்டிச்சுவராக்காமல் இனியாவது நம் நாட்டின் நலத்திற்காகவும், சினிமா கலைக்காகவும் பாடுபடவேண்டுமென்பதுதான் என் கோரிக்கை. இதைத்தான் நானும் விரும்புவது. சகலருமம விரும்புவது.

படமுதலாளிகள், படித்துப் படித்து, கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன புராணப் படங்களையே தயாரிக்காமலும், ஏற்கனவே வெளிவந்துள்ள கதைகளையே, உதாரணமாக வள்ளி, நந்தனார், அரிச்சந்திரா போன்ற படங்களாகவே தயாரிக்காமலும், கூடுமானவரையில் சமூகப் படங்களையே தயாரிப்பது நல்லது. அப்படி தயாரிப்பதை நல்ல முறையில் ஆபாசமின்றி தயாரிப்பது. நடிக நடிகைகளின் தேர்தலில் முக்கிய கவனம் செலுத்துவது மிகவும் அவசியம். பாட்டுக் கோர்வையைக் குறைப்பது மிகவும் நல்லது. படத்தின் விறுவிறுப்பைக் குறைக்கும் அநாவசியமானதும், ஆபாசமானதுமான காமிக்குகளைச் சேர்க்காமலிருத்தல் உசிதம். கன்னியர் மீதுகொண்ட அன்பை (மோகத்தை) கலைமீது திருப்பிக்கொள்ளுதல் மிகவும் முக்கியம்.

முதலாளிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏதோ கடமைக்காக உழைக்க வேண்டுமென்று கருதும் டைரக்டர்களும், நடிகைகளுக்கு தாசர்களாக கிடக்கும் டைரக்டர்களும் இனியாவது நம் நாட்டிற்காகவும் சினிமா கலைக்காகவும், தங்கள் பிற்போக்கான மனப்போக்கை மாற்றிக்கொண்டால்தான் நம் தமிழ் நாட்டின் சினிமா கலை உயரும். அப்படி இவர்கள் இதுபோலவே தொடர்ந்து சினிமா கலையை கொலைசெய்யக் கருதுவார்களாயின், கருணைகூர்ந்து சினிமா உலகைவிட்டே நீங்குவதுதான் நலமென்று எனக்குத் தோன்றுகிறது.

நடிக நடிகைகளும் இதுவரை நடந்துகொண்டதைப் போல் இல்லாமல் இனியாவது புத்துணர்ச்சியடைந்தவர்களாய் தங்கள் ஊழியத்தை செவ்வெனச்செய்து சினிமா துறையிலேயே ஏன் நம் நாட்டிலேயே ஒரு தனிப்புகழை நிலைநாட்டுவார்கள் என நம்புகிறேன்.

தமிழ்த் திருநாடு சினிமா கலையில் முன்னணியில் நின்று கூடிய சீக்கிரம் மேல் நாட்டினருடன் போட்டிப்போடும் நிலைமைக்குக் கொண்டுவந்து விடும்படி எல்லாம்வல்ல நம் தமிழ்த் தாய் அருள்புரிவாளாக.

தமிழ் ஓங்குக!
தமிழ் நாடு ஓங்குக!!
தமிழ் நாட்டின் சினிமா கலை ஓங்குக!!!

# உலக முழுவதிலுமுள்ள படக்கொட்டகைகள்.

Reprinted from Motion Picture Herald, New York.

உலகத்திலேயே சினிமா கொட்டகைகளின் எண்ணிக்கையில் முதல் ஸ்தானம் வகிப்பது அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகள் தான் (United States). சர்வ தேசங்களையும் ஒப்பிட்டுப் பார்க்குங் காலத்து, நம் இந்தியா தேசம் உலகத்தில் எட்டாவது ஸ்தானம் வகிக்கிறது. இதைக் கீழ்காணும் அட்டவணையில் காணலாம்:—

| | நாட்டின் பெயர். | கொட்டகைளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.) | 16,500 |
| 2 | சோவியத் ரஷ்யா | 16,000 |
| 3 | கிரேட் பிரிட்டன் (Great Britain) | 5,100 |
| 4 | பிரான்ஸ் (France) | 4,392 |
| 5 | ஜெர்மனி | 4,000 |
| 6 | ஸ்வீடன் | 2,442 |
| 7 | இத்தாலி | 2,000 |
| 8 | இந்தியா | 1,957 |
| 9 | செக்கோஸ்லவோக்கியா | 1,893 |
| 10 | ஸ்பெயின் | 1,600 |
| 11 | ஜப்பான் | 1,500 |
| 12 | ஆஸ்திரேலியா | 1,400 |
| 13 | பிரேஸில் | 1,400 |
| 14 | அர்ஜண்டிறு | 1,343 |
| 15 | கானடா | 1,286 |
| 16 | மெக்ஸிகோ | 1,119 |
| 17 | பெல்ஜியம் | 1,103 |
| 18 | நியூஜிலந்து | 551 |
| 19 | ஆஸ்திரியா | 500 |
| 20 | போலந்து | 500 |
| 21 | தென் ஆப்பிரிக்கா | 465 |

| | நாட்டின் பெயர். | கொட்டகைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 22 | நெதர்லந்துகள் | 450 |
| 23 | யூகோஸ்லாவியா | 450 |
| 24 | டென்மார்க்கு | 430 |
| 25 | ஹங்கேரி | 400 |
| 26 | க்யூபா | 375 |
| 27 | ருமேனியா | 350 |
| 28 | ஸ்விட்ஸர்லந்து | 350 |
| 29 | வட ஆப்பிரிக்கா | 347 |
| 30 | வெனிஜுலா | 329 |
| 31 | கொலம்பியா | 300 |
| 32 | போர்ச்சுகல் | 288 |
| 33 | சீனு | 275 |
| 34 | அயர் | 274 |
| 35 | பின்லந்து | 250 |
| 36 | நார்வே | 250 |
| 37 | கிரீஸ் | 250 |
| 38 | பிலிப்பைன்ஸ் | 250 |
| 39 | சில்வி | 250 |
| 40 | பெரு | 210 |
| 41 | பல்கேரியா | 185 |
| 42 | நெதர். இந்தியா | 160 |
| 43 | பெர்டோ ரிகோ | 147 |
| 44 | உருகுவே | 140 |
| 45 | துருக்கி | 130 |
| 46 | எகிப்து | 125 |
| 47 | சையாம் | 100 |
| 48 | மலேயா | 100 |
| 49 | இந்தோ-சைனு | 100 |
| 50 | மற்ற சிறிய நாடுகள் | 1,030 |
| | மொத்தம் | 75,346 |

"Serve & Please"
Our Motto.

"Clients' Satisfaction
Our Asset"



# BROWN & CO.,

OPHTHALMIC OPTICIANS

Speedily executes your orders under expert organisation

Best in Lenses & Frames.

A trial will convince you.

Head Office :
**18 C, Broadway,**
Near Loan Square,
**MADRAS**

Branch Office :
**59, Town Hall Road,**
**MADURA**

சி. இ. ராஜன் & பிரதர்ஸ்




நாகரீகமான
வில்வெட் நகை
பெட்டிகளும்,
அட்டை பெட்டி
களும் தயாரிப்
பவர்கள்

84, ஏழுகிணறு
தெரு,
மதருஸ் 1.

# A. K. ZAINUDDIN & CO.

**12/79, Sembudoss Street,**

**MADRAS 1.**

Pipe Fittings, Hardware and
Machinery Merchants

**A. K. ஜெயினுதீன் & கோ**

பைப்பிட்டிங் மெஷினெரி வியாபாரம்

12/79 செம்புதாஸ் தெருவு மதரூஸ் 1.

# General Machinery Mart

Oil Engines, Pump, Rice Huller, etc.
Order Suppliers
and
Commission Agents

**21, Errabalu Chetty Street,**

**G. T., MADRAS**

Offering to all Art-Lovers, A Valuable Edition of the Art of

## "THE INDIAN DANCE"

by

**The Late C. R. Srinivasa Iyengar B.A.**

Rs. 4/- per copy — postage extra

Only limited Number of copies available

*GET YOUR COPY IMMEDIATELY*

### BOOKS OF OUTSTANDING VALUE

| | | | | |
|---|---|---|---|---|
| **Our Heritage** by Humayun Kabir | ... | 4 | 0 | 0 |
| **Jawaharlal Nehru—The Man and His Ideas** by Y. G. Krishnamurthy | ... | 4 | 4 | 0 |
| **Contemporary Indian Painters** by G. Venkatachalam (illustrated) | ... | 8 | 4 | 0 |
| **Freedom—My Destiny** by Sri Y. G. Krishnamurthy | ... | 4 | 0 | 0 |
| **Subject India** by H N. Brailsford | ... | 4 | 8 | 0 |
| **The Political Philosophy of Mahathma Gandhi** by Dr. G. N. Dhawan with forward by Sir S. Radhakrishnan | ... | 8 | 8 | 0 |
| **Indian Architecture** by Sir O. C. Gangooly | ... | 5 | 8 | 0 |
| **Indian Music** by D. P. Mukerji | ... | 5 | 0 | 0 |
| **Dale Carnegie's Biographical Round Up** | ... | 5 | 12 | 0 |
| **Federation of India** by P. R. Lele | ... | 1 | 0 | 0 |
| **New History of the Mahrattas** by G. S. Sardesai | ... | 10 | 0 | 0 |
| **Shadows on the wall** by Krishna Huthee Singh | ... | 4 | 8 | 0 |

*Postage extra—Apply for Catalogue*

Address to :

## R. GURUMURTHY

Book-Seller, Publisher & Sole Distributor,

**15, Westcott Road,**

**MADRAS 14.**

விரைவில் வெளிவருகிறது!

## தமிழ் நாட்டில் தலைசிறந்து

## விளங்கவிருக்கும் சினிமா பத்திரிகை.

# "?"

(ஆசிரியர்: "செங்கு")

## மாதமிருமுறை வெளிவரும்.

சினிமாவின் சீரிய கொள்கையை விளக்கிக்காட்டும் சிறந்த கட்டுரைகள், அறிவிற் சிறந்த அறிஞர் பலரின் அற்புத இலக்கிய சிருஷ்டிகள், அன்றாட வாழ்க்கையைச் சித்தரிக்கும் அரிய கதைகள், கருத்தைக் கவரும் கவிதைகள், நடிக நடிகையரின் வாழ்க்கைச் சம்பவங்கள், பாரபக்ஷமற்ற தமிழ் பட விமர்சனங்கள், ஸ்டுடியோ செய்திகள் மற்றும் பற்பல அம்சங்கள் நிறைந்தது.

வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்.

எமது அடுத்த வெளியீடு!

சதிகார சமூகம் அவளைக்கொன்றது.
சமூகத்திற்குப் பயந்தாள் - மடிந்துப்
போனாள்.
அவள் மரணத்தால் அவன் கைது
செய்யப்பட்டான்.
அதற்கு அவனா பொருப்பாளி?
இதுவும் சமூகந்தானே!

"சிவகாமி"

சமூக சீர்திருத்தத்தை சித்தரிக்கும் சிறந்த கதை.

எல்லா ஊர்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு எழுதவும்:

செங்கு பதிப்பகம்

ஏழூகிணறு :: சென்னை 1.

3-12-92

22A
7-44

எதிர்பாருங்கள்!

நாடகமேடையில் மறுமலர்ச்சி!!

கண்ணுக்கு அரிய காக்ஷி
காதுக்கினிய கானம்

"வாணியாரின்"
இசைச்சித்திரம்!!!

S. G. சம்பந்தம்
நடிக்கும்

# "இசையோகி"
(தமிழ்)

கதை, வசனம்,
பாட்டு
டைரக்ஷன்:
M. C. ராயன்

கருத்தைக்கவரும் கற்பனைக் கதை
இன்பமூட்டும் இன்னிசை விருந்து.
காதல், சோகம், நடனம், ஹாஸ்யம்
நிறைந்தது.

சென்னையிலே நடைபெறும்
தேதியை எதிர்பாருங்கள்.